# ஈரோஸ் உறுப்பினர் நேற்று பதவியேற்பு

தேர்தல் மூலம் வெற்றி பெற்று கடந்த ஐந்துமாத காலமாக பாராளுமன்றத்தை பகிஷ்கரித்துவந்த 'ஈரோஸ்' உறுப்பினர்கள் பன்னிரண்டு பேர் நேற்று பாராளுமன்ற உறுப்பினர்களாக சபாநாயகர் எம், எச் 'மொகமட் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர், திருவாளர்கள் இளையதம்பி இரத்தினசபாபதி, இளையதம்பி பரராஜசிங்கம், தியாகராஜா புவனசுந்தரராஜா, செபஸ்தியாம்பிள்ளை எட்வேட், அழகக்கோடி குணசீலன், கணபதி செல்வநாயகம், வி. இராஜலிங்கம், குணசீலன் சௌதரராஜன், வேலாயுதம் கைலாசபிள்ளை, சிவப்பிரகாசம் இரத்தினராஜா, ஜனுப் பஷீர்ஷேக்தாவூத், ஜனுப் பஷீர் அலி ஆகியோரே நேற்று சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட ஈரோஸ் எம். பிக்களாவார்கள்.


பக்கங்கள் எட்டு விலை ரூபா: 2-50

# முரசொலி

முரசு 03 ஒலி 191 சனி 22-07-1989 (ஆடி 07) துல் ஹஜ் 18


# இந்திய அமைதிப்படை முகாம் மீது இலங்கை போர் விமானம் ரோந்து

## இது ஒரு சீண்டுதல் சம்பவம் என அறிவிப்பு

(சென்னை)

இந்திய அமைதிப்படை முகாம்மீது இலங்கை விமானப்படை போர்விமானம் ஒன்று திடீரென தாக்குதல் முஸ்தீபுடன் நேற்று முன்தினம் இரவு வட்டமிட்டதாக இந்திய அமைதிப்படை வட்டாரங்கள் சென்னையில் தெரிவித்தன.

நேற்று முன்தினம் இரவு வவுனியாவில் அமைந்துள்ள இந்திய அமைதிப்படை தலைமையகத்தின் மீது இலங்கை விமானப்படையைச் சேர்ந்த இத்தாலிய தயாரிப்பான மார்சற்றி போர் விமானம் திடீரென தோன்றி சிறிது நேரம் வட்டமிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த விமானம் வவுனியாவில் உள்ள அமைதிப்படை விமானத்தளத்தின் மீதும் வட்டமிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒரு சீண்டுதல் சம்பவம் என்று இந்திய அமைதிப்படை வட்டாரங்கள் நேற்று சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளன.

## ஜி. சி. ஈ. (சா.த.) பரீட்சைமுடிவு மீளாய்வு விண்ணப்பங்கள்

● மாதிரி விண்ணப்ப படிவம் 7 ஆம் பக்கத்தில் ●

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதர தனிப் பட்டபரீட்சார்த்திகளின்பெறுபேறுகள் அனைத்தும் அவர்களது தபால் முகவரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து இப்பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## ஒரு மணித்தியாலயம் அதிகரிப்பு

பாடசாலை இயங்கும் நேரம் ஒரு மணித்தியாலத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் பல நாட்கள் இருந்தபடியினாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

— 7ஆம் பக்கம் பார்க்க

### பாராளுமன்றத்தில் சாம். தம்பிமுத்து பேச்சு:

## அரசு எமது பாதுகாப்புக்கு இன்னமும் ஆயுதம் தரவில்லை

கூட்டணித் தலைவர்களான திரு. அமிர்தலிங்கமும், திரு. யோகேஸ்வரனும் கொழும்பில் கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு. உமாமகேஸ்வரனும் கொழும்பில் கொலை செய்யப்பட்டார். இந் நிலையில் தமிழ் மக்களால்

→ 7ஆம் பக்கம் பார்க்க

## பைத்தியக்கார வேடம் ஜே. வி. பியின் தண்டனை

கொழும்பில் உள்ள பிரபல்யமான வீதியொன்றில் ஒருவர் பைத்தியக்காரன் போல் தலை மொட்டையடிக்கப்பட்டு, உடலில் கரிபூசிக்கொண்டு வீதியில் வலம் வந்தார். தானாகவே தன்னுடல் மேல் கரிபூசிக்கொண்டு நடந்தார். தற்கொலைப் பிரச்சினை என்று எமது கொழும்பு நிருபர் மெல்ல அணுகி விபரத்தை கேட்டபோது தான் நகரில் ஹர்த்தால் அனுஷ்டித்தபோது மினிபஸ் ஓடியதாகவும்

— 7ஆம் பக்கம் பார்க்க

## இன்று யாழ்தேவி

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கான யாழ் தேவி ரயில் சேவை இன்றும் நாளையும் நடைபெறும்.

காலைஒன்பதுமணிக்கு யாழ். புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கான யாழ்தேவி ரயில் புறப்படும். நேற்று யாழ் தேவி வந்தது.

## பாராளுமன்ற பந்தோபஸ்து பார்வையாளர் அனுமதி மறுப்பு

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் மேலும் நீடிக்கப்படுவது பற்றிய விவாதம் நடைபெற்றது. ஜனாதிபதியின் அவசரகாலப் பிரகடனத்தை சபையில் சபாநாயகர் அறிவித்தார். கடந்த ஜூன் மாதம் 18-ம் திகதியே இந்த அவசர

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் பஸ்களில் குண்டு?

போக்குவரத்து சேவை சகஜ நிலைக்குத் திரும்பியிருந்தாலும் பஸ்களில் தீவிரவாதிகளினால் வெடிகுண்டுகள் மறைத்து வைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாகத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பஸ்களில் பயணிகள் ஏறுமுன் அவர்களையும் பொதிகளையும் நன்றாகப் பரிசிலனை செய்யுமாறு நடத்துநர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

இப்பணிப்புரை புகையிரதப் பகுதியினருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## வடகிழக்கு ஆஸ்பத்திரிகளுக்கு இந்தியா உதவிகளை வழங்கும்

வடக்கு கிழக்கு மாகாண வைத்தியசாலைகளின் பாவனைக்கென ஐந்து எக்ஸ் கதிரியக்க இயந்திரங்களையும் இருபத்தி ஐந்து அம்புலன்ஸ் வண்டிகளையும், நோயியல் ஆய்வுகூட உபகரணத் தொகுதியையும் வழங்குவதற்கு இந்தியா ஒப்புக்கொண்டுள்

— 8ஆம் பக்கம் பார்க்க

## இந்திய பாராளுமன்றத்தில் நேற்றும் குழப்பம்

(புதுடில்லி)

நேற்று மூன்றவது நாளாகவும் இந்தியப் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் ஒத்திப்

— 8 ஆம் பக்கம் பார்க்க

### இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரிக்கை

## உமாமகேஸ்வரன் கொலைக்கு 'புளொட்' இயக்கம் கண்டனம்

எமது விடுதலை ஸ்தாபனம் இனத்துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு விடுதலைப் போராட்டத்தினை மழுங்கடிக்கப்பட்டபோதிலும் மக்கள் விடுதலைக்கான எமது போராட்டத்தினை முன்னெடுத்துச் சென்றவேளை எதிர்ப்புரட்சியாளர்களினால் கொடூரத்தனமாக படுகொலை செய்யப்பட்டதினை கழகத் தோழர்கள் அனைவரும் மிகுந்த வேதனையுடன் வன்மையாக

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் இணைப்பாளரை கச்சேரியில் சந்திக்கலாம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ப. பராபரனின் அலுவலகம் வவுனியா கச்சேரியில் அமைந்துள்ளது.

முன்னர் மாவட்ட அமைச்சரின் செயலகமாக இயங்கிய இவ் அலுவலகம், மேற்படி இணைப்பாளரின் காரியாலயமாக மாற்றப்பட்டுள்ளது.

→ 7 ஆம் பக்கம் பார்க்க

# இந்தியப் பொருள்கள் பகிஷ்கரிப்பின் எதிரொலி!

# இலங்கை கழிவு இரும்பை இறக்க இந்தியா மறுப்பு

இந்தியப் பொருள்களை இறக்குவதற்கு இலங்கை துறைமுகத் தொழிலாளர்கள் மறுத்து வருவதன் காரணமாக இலங்கைக்கு இந்தியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நான்கு கப்பல்கள் கடந்த 38 நாட்களாக தூத்துக்குடி துறைமுகத்தில் தரித்து நிற்கின்றன. மேலும் இப்பிரச்சினை தொடருமானால் இலங்கையில் இருந்து இறக்கப்படும் கழிவு இரும்பை பகிஷ்கரிக்கப் போவதாக தூத்துக்குடி துறைமுக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நான்கு கப்பல்களிலும் ஐம்பது லட்சம் டாலர் பெறுமதியான மருந்து வகைகளும், மின்சார பொருள்களும், சைக்கிள் உபகரணங்களுமே ஏற்றப்பட்டுள்ளன. இக்கப்பல்கள்

→ 7ஆம் பக்கம் பார்க்க

### உலக கிரிக்கெட் சபை தீர்மானம்

# உலக கிரிக்கெட் அரங்கில் தென் ஆபிரிக்கா இடம்பெருது

அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகின் கிரிக்கெட் ஆடும் நாடுகளின் கூட்டத்தில் மீண்டும் உலக கிரிக்கெட் அரங்கில் பிரவேசிக்கும் தென் ஆபிரிக்காவின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

தென்ஆபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தென் ஆபிரிக்காவை மீண்டும் உலக கிரிக்கெட் அரங்கில் அனுமதிக்க வேண்டுமென்றும் அத்துடன் தென் ஆபிரிக்காவின் கிரிக்கெட் ஆட்டத்தின் உண்மை நிலையை அறிய ஒரு குழுவை அனுப்புமாறும் கோரியிருந்தது. ஆனால் உலக கிரிக்கெட் சபை இக்கோரிக்கைகளை நிராகரித்துள்ளது.

அத்துடன் தென் ஆபிரிக்க கிரிக்கெட் சபை தலைவர் ஜோ பமென்ஸ்சியும் செயலாளர் அலி பாக்கரும் தற்போது நடைபெறும் உலக கிரிக்கெட் சபை கூட்டங்களிலும் பங்குபற்ற அனுமதிக்கப்படவில்லை.

தென்ஆபிரிக்காவின்கறுப்பர்களுக்கு எதிரான இனவாத கொள்கையை எதிர்த்துதென் ஆபிரிக்கா சகல விளையாட்டுகளினின்றும் 1970இன் ஆரம்ப பகுதிகளிலிருந்தே நீக்கி வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

## சமயபாடப் பரீட்சை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தும் சைவசமய பாடப் பரீட்சையை இந்த ஆண்டும் நடாத்த தீர்மானித்துள்ளது. இப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 12-ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ரீதியாக நடாத்தப்படும் இப்பரீட்சையில் மிகத்திறமையாக சித்தியடைவோருக்கு அகில இலங்கை ரீதியில் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கூடிய மாணவர்களை இப் பரீட்சையில் சேர்க்கும் பாடசாலைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கப் பாடத்திட்டத்திற்கமைவாகவே வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மேலதிக விபரங்களையும்,பாடவிதானங்களையும் பெற சபையினருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கோத்தணி அமைப்புகளால் மறுமலர்ச்சி ஏற்படுகின்றது

தற்போது அரசால் அறிமுகம் செய்யப்பட்ட கொத்தணி அமைப்பு ஓர் குடும்பம் போன்றதே. அறிமுறை மட்டத்தில் இவ்வமைப்பு சிறப்பானதென தோன்றினாலும், செயல்முறை மட்டத்தில் நற்பலன் உண்டாவது கொத்தணியின் அதிபர்கள், ஆசிரியர்களின் விசுவாச சேவையை சார்ந்ததாகும்.

இவ்வாறு முன்னாள் மானிப்பாய்ப் பகுதி கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி ஆசிரிய மன்றம் அளித்த பிரிவுபசார வைபவத்தில் குறிப்பிட்டார். மன்றத்தலைவர் திரு. க. புவனேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தொடர்ந்து பேசிய திரு. தனஞ்செயன்,

கொத்தணி கோட்ட அமைப்புகள் அதிகாரப் பரவலாக்கத்தால் பாடசாலைகளின் பரிபாலனம் நிர்வாகம் ஆகியவற்றை இலகுவாக்குவதோடு பாடசாலைத் தேவைகளையும் விரைவில்பூர்த்தியாக்கின்றது. இதனால் சகல மாணவர்களுக்கும் சம சந்தர்ப்பம் கிடைக்கும். ஆகவே கல்வியில் ஒரு மறுமலர்ச்சி பிறக்கும் என்றார்.

மற்றும் ஆசிரியர்களான திரு. வீ இரத்தினசிங்கம்,திருமதி வரதராசா உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர். மன்றச்செயலர்திருமதி சயோசரத்தினம் நன்றியுரைவழங்கினார்

## ஆணையாளரிடம் மகஜர்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு சட்டம்பித்தறை விசாகப் பெருமான் ஆலயம் அமைந்திருக்கும் ஐந்தாம் குறுக்குத் தெரு ஆலயக் குறுக்கு ஒழுங்கைக்கு மின் வெளிச்சம் ஏற்படுத்தித் தருமாறு கோரும் மகஜரொன்றைக் கொழும்புத்துறை இந்து மாமன்றச் செயலாளர் திரு. சி.சி. வரதராசா யாழ். மாநகர ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கொழும்புத்துறை கிழக்கில் பல வருட காலமாகக் கவனிப்பாரின்றிச் சீர்கேடான நிலையில் இருந்து வரும் மதகு அணை, வீதிகள், மின்னொளிக் குறைபாடுகள் பற்றிக்கொழும்புத்துறை இந்து மாமன்றம் யாழ். மாநகர ஆணையாளரிடம் மகஜர் மூலம் சுட்டிக் காட்டியுள்ளது.

## கரவெட்டியில் தீ மிதிப்பு

(வடமராட்சி)

கரவெட்டிமேற்கு முங்கோடை முருகனாலய வருடாந்த வேள்வியும், தீ மிதிப்பு வைபவமும் அண்மையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இவ்வைபவத்தை கண்டுகளித்து முருகனின் அருள் பெற்று ஏக இப்பகுதி மக்களுடன் அயல்கிராம மக்களும் வருகை தந்திருந்திருந்தனர்.

ஜேர்மனி — கனடா

ஆகிய நாடுகளுக்கு போக விரும்பியவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

★ தாய்வான் ★

50 வேலையாட்கள் தேவை, சம்பளம் - 250 USD

★ பாஃரேன் ★

மேசன், தச்சுவேலை, கூலியாட்கள் தேவை.

உடனடியாக தொடர்பு கொள்ளவும்

**V. T. R. Travels**

41, 3rd CROSS STREET
JAFFNA

07169

★ லண்டன் ★ ஜேர்மன்
★ சுவிஸ் ★ பிரான்ஸ்
★ ஹொலண்ட் ★ சவுதி அரேபியா

ஆகிய நாடுகளுக்கு
துரிதகதி பிரயாண ஒழுங்குகள்

அத்துடன்

பாஸ்போட், பொண்ட் ஆகியன உடனே
செய்து கொடுக்கப்படும்

உங்கள் பயண அமைப்பாளர்

**M. P. LINGAMS**

764, Hospital Road
Jaffna

07162

## நன்றி நவிலல்

எமது திருமணத்தின் போதும், விருந்து உபசாரத்தின்போதும் வருகைதந்து சிறப்பித்தும் வாழ்த்துக்களை அனுப்பி நல்லாசிகள் வழங்கிய அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள்

திரு. திருமதி சத்தியசீலன்
182/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

09-07-1989 07178

## UNIVERSITY OF JAFFNA
# TENDER NOTICE

University of Jaffna proposes to construct an Animal House at Faculty of Medicine. For the implementation of this project the University will engage an Architect/Architectural firm to provide consultancy services. This services will consist of schematic design, preliminary report, preparation of drawings & B O. Q., tender documents, evaluation of tenders, supervision of works, contract administration, certification of payments etc.

The consultancy fee quoted shall be a lumpsum.

Tender documents can be obtained from the works Engineer, University of Jaffna from 24. 07. 89 to 26 07 89 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of following tender fee:

I. Refundable - Rs. 1000/-
II. Non-refundable - Rs. 200/-

The perfected tender forms should be sent to reach the works Engineer, University of Jaffna on or before 11. 08 89 at 10. 00 a,m.

University of Jaffna reserves the right to reject any tender.

Actg. Registrar
University of Jaffna.
Thirunelvely, Jaffna.

07153

## சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள 7½ கோஸ் பவர் மோட்டர், ,லேற் எஞ்ஜினுக்குப் பாவிக்கக் கூடிய பெரிய டைனமோ 3 பேஸ் டெக் விற்பனைக்குண்டு. தொடர்பு:த மார்க்கண்டு வராத்துப்பளை, பருத்தித்துறை. 07177

J. V. C வீடியோகமரு G X N 70 National Portable வீடியோ டெக் N V 180 ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: எவர்விஷன் 21,மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம் 07157

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கவீதியில் 4¾ பரப்பு காணி மாடிக் கட்டிடத்தில் மின்சாரம்,மோட்டார் போன்றவற்றுடன் இருப்பிட வீட்டு வசதிகளுடனும் கீழே 4 கடைகளுடன் உடன் வியாபாரம் ஆரம்பிக்கக் கூடிய நிலையிலும் விற்பனைக்கு உண்டு நல்ல சூழ்நிலையில் உள்ளது. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு கொள்ளவும்: வீ.சுப்பிரமணியம், ''சந்திரன் இல்லம்'' ஞா ப.ச. வீதி,கல்வியங்காடு,யாழ்ப்பாணம். 07175

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி சதாசிவம் செல்லம்மா

தோற்றம்: 01. 08. 1922
மறைவு: 01. 08. 1988

திதி: 22-07-1989

வாடா மலரே அம்மா! நீங்கள் எம்மை
இங்கு வாடவிட்டுச் சென்ற தேனம்மா
நிலையான கல்வி செல்வந்தர விளைந்தாயம்மா
நிலை தடுமாறிச் சென்ற தேனம்மா
தாயிழந்த கன்று போல் தவிக்கிறோமம்மா
தரணியில் பரிமாறும் வார்த்தையும் இனி இல்லையம்மா
இரும்பாக்கி எம்மனத்தை இருக்க நினைத்தாலும்
கரும்பான உம் நினைவு எம்மை வாட்டுகின்றதே
எப்போதும் அருகிருந்து அணைத்த தெய்வமே
எங்களை வாழவைக்க நீங்கள் பட்ட பாட்டினை
எண்ணி எண்ணி மனம் துடிக்கின்றோமம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

ச. இராமலிங்கன்
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

07174

# இதயநாதம்

சனிக்கிழமை 22. 07. 1989

நல்ல புத்தகங்களைப் படிப்பது, சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மிகச்சிறந்த அறிவாளிகளுடன் பேசுவதற்கு ஒப்பாகும்.

- டெஸ்கார்டிஸ்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## எதிர்க்கட்சி என்றால் எதிர்க்கும் கட்சி அல்ல

தெற்கின் வேலைநிறுத்த நெருக்கடியானது அரசிற்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தது.

அரசு அவசரகால நிலைமூலம் பதில் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை சமாளிக்க அரசினால் முடியாது எனவும் உடனடியாக ராஜினாமாச் செய்ய வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா கோரியுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது பற்றியும் அவர் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனை நடாத்தியுள்ளார்.

இதே சமயம் இந்த அரசாங்கத்தை ராஜினாமா செய்யுமாறு கோரிக்கை விடுக்க வேண்டும் என்று நவசமசமாஜக் கட்சி எம். பி வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

அரசின் நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவு வழங்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விதம் சிங்கள எதிர்க்கட்சிகள் அரசிற்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்றும், அரசு உடன் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளன.

இது ஒன்றும் எமது அரசியலில் புதிதல்ல ஆள்மாறி, ஆள்மாறி எதிர்க்கட்சிகளாக வந்த சகல பேரின எதிர்க்கட்சிகளும் நாட்டின் நெருக்கடி காலங்களில் கூறும் கூற்றுகள் இவைதான்.

அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதன் மூலமோ, அல்லது ராஜினாமா செய்யக் கோருவதன் மூலமோ நாட்டின் நெருக்கடி நிலையை தீர்க்க முடியும் என்று இவர்கள் நம்பவில்லை.

மாறாக தமது பதவிகளுக்கு பாதுகாப்பு தேடவும், பொதுத்தேர்தலை மனதில் கொண்டுமே இப்படியான கூற்றுக்களை பேரின எதிர்க்கட்சிகள் முன்வைக்கின்றன.

இன்று வேலைநிறுத்தக்காரர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் நியாயமானவை என்றால் அவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டும்;

அல்லது அரசின் விடாப்பிடிக் கொள்கை சரியென்றால் அதற்கு ஒத்து ஊதவேண்டும்.

அதுதான் ஒரு நியாய எதிர்க்கட்சிவாதி செய்யக்கூடிய செயலாம்.

இந்நிலையில் தாம் அரசாங்கக் கட்சியாக இருந்தால் என்ன செய்வார்கள் என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாட்டு மக்கள் பிரச்சினைகளிலிருந்து மீளக் கூடிய வழிவகைகளை எடுத்துக்கூற வேண்டும்.

நியாயமான போராட்டங்களுக்கும், நியாயமான பதில் நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிக்க வேண்டும்.

இதுவே தம்மை தெரிவு செய்து அனுப்பிய மக்களுக்கு அவர்கள் செய்யும் தொண்டாகும்.

ஒரு நாட்டின் எதிர்க்கட்சியானது நாட்டின் அரசு தவறிழைக்கும் போது சுட்டிக்காட்டவும், மக்களை அரசு புறக்கணிக்கும்போது மக்களுக்காக குரல் கொடுக்கவும் வேண்டும்.

மகாத்மா காந்தி கூறியதைப்போல் நாம் பதவியில் இருக்கும்போது செய்ய முடியாதவற்றை பதவியில் இல்லாதபோது செய்யுமாறு அடுத்தவரைக் கேட்கக் கூடாது.

எதிர்க்கட்சி என்றால் அரசின் செயற்பாடுகள் அனைத்தையும் எதிர்க்கும் கட்சி என்பதல்ல என்பதை எதிர்க்கட்சிகள் உணர வேண்டும்.

# உடுகம்பொலவின் நியமனம்தான் அனுராவின் கொலைக்கு காரணமா?

திரைக்கு பின்னால் நடப்பவை

கொழும்பு நகரில் பஸ்ஸுக்காக காத்திருந்த வேளையில் மக்கள் வெள்ளம் திரண்டு கொண்டிருந்ததேயன்றி பஸ் வருவதாகத் தெரியவில்லை. திடீரென இரு பொலிஸ்காரரர்கள் எங்கிருந்தோ வந்தார்கள். கூட்டத்தினுள் சலசலப்பு எழுந்தது. கூட்டத்தில் நின்றவர்கள் முண்டியடித்துக் கொண்டு பொலிஸ்காரர்களை அணுகி தாம் செல்லவேண்டிய இடங்களை போட்டிபோட்டுக் கொண்டு சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

எதற்காக ஜனங்கள் இதை இவர்களிடம் கூறுகிறார்கள் என்பது நமக்கு ஆரம்பத்தில் புரியவில்லை. என்ன நடக்கப் போகிறது என்பதை அறிய ஆவலாய் காத்திருந்தோம்.

தெருவில் ஆடம்பரக் கார் ஒன்று பஸ்ஸிற்காக காத்திருந்தவர்களின் எரிச்சல் பார்வைகளைத் தாண்டிக்கொண்டு விரைவாக வந்துகொண்டிருந்தது. பொலிஸ்காரரர்களில் ஒருவர் திடீரென அதை மறித்தார். காரின் உள்ளே அரச அதிகாரிபோல் உடை உடுத்திய நபர் ஒருவரிருந்தார். கார் போகும் இடத்தைக் கேட்டறிந்து கொண்ட பொலிஸ்காரரர் கூட்டத்தைப் பார்த்து குறிப்பிட்ட இடத்திற்கு செல்வோர் ஐந்துபேர் வாருங்கள் என்றார்.

ஐவர் முண்டியடித்துக் கொண்டு சென்றனர். கார்க் கதவைத்திறந்து அவர்களை காரினுள் ஏற்றிய பொலிஸ்காரரர் மீண்டும் கார் சொந்தக்காரரரை பார்த்து இவர்களை குறிப்பிட்ட இடத்தில் இறக்கி விடுங்கள் என்றார். கார் சொந்தக்காரரர் முகத்தில் அசடு வழிந்தது. எதுவும் சொல்ல முடியாதவராக காரைநகர்த்தினார்.

அதன் பின்னர் தெருவில் சென்ற பல கார்கள் மறிக்கப்பட்டன. குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்வோர் கார் சொந்தக்காரரர்களின் அனுசரணையின்றியே அவற்றினுள் ஏற்றி அனுப்பிவைக்கப்பட்டார்கள். இவ்விதமாக பஸ்ஸிற்காக காத்திருந்தவர்களில் பாதிப்பேருக்கு பிரயாண ஒழுங்கு செய்துகொடுத்த அந்த பொலிஸ்காரரர்கள் இருவரும் நம்மைப்பார்த்து பெருமிதமாய்ச் சிரித்துவிட்டு மிடுக்காக அகன்று சென்றார்கள்.

இவர்கள் செய்யும் இச் சேவையைப்பாராட்டத்தான் வேண்டும். ஆனால் சேவையின் பெயரால் தனி மனிதர்களின் தனிப்பட்ட உணர்வுகளுக்கு மதிப்புத்தராமல், ஆகக் குறைந்தது அவர்களிடம் அனுமதி கூடப்பெறாமல் பிரயாணிகளை அவர்கள் வாகனங்களில் ஏற்றி குறிப்பிட்ட இடத்தில் இறக்கி விடுங்கள்

## ரஞ்சன்

என்று மட்டும் பணிவாகச் சொல்வதால் எவரும் உயர்ந்து விடுவதில்லையல்லவா?

இதுபற்றி கருத்துக் கேட்பதற்காக திருவாளர் பொதுஜனத்தைத் தேடினோம். யாரோ ஒரு பொலிஸ்காரரரின் புண்ணியத்தில் சற்று முன்பு தான் திருவாளர் பொதுஜனம் பென்ஸ்கார் ஒன்றில் ஓசிப்பயணம் செல்வதாக தகவல் கிடைத்தது.

### இரவுக் கொள்ளைகள்

கண்டி பெரகர நெருங்கி வரும் இவ் வேளையில் கண்டி பற்றிய செய்திகளும் சற்று சூடாகத்தான் வந்து கொண்டிருக்கின்றன. ஜே.வி.பி யின் தலைமை மையம் கண்டியில் இயங்கத் தொடங்கியுள்ளதாக சந்தேகப்பேச்சு எழத் தொடங்கியுள்ள அதே வேளையில் கண்டியின் கிராமப்புறங்களில் சமூக சீர்திருத்த நடவடிக்கைகளில் ஜே. வி. பியினரும், அவர்களின் அனுதாபிகளும் முனைப்புடன் செயல்படுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

கண்டி மாவட்டத்தில் ஹேவாகெட்ட, உடிஸ்பத்துவ, றன்கல, தெல்தெனியா, கந்தானே போன்ற இடங்களில் ஜே. வி. பியினரின் நடவடிக்கைகள் வெளிப்படையாகவே நடைபெறுகின்றன. இத்தகைய இடங்களில் இரவு நேர ரோந்துகளை பொலிஸார் முற்றாக நிறுத்தியுள்ளனர். இதனால் இரவுநேரக் கொள்ளைகள் இவ்விடங்களில் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. பொலிஸாரிடம் மக்கள் முறையீடு செய்தபோதிலும் கொள்ளைகள் நிற்கவில்லை.

இத் தருணத்தில் கந்தானே என்ற இடத்திற்கு சில இளைஞர்கள் வந்தார்கள்... "கொள்ளையர்களின் கைவரிசைகளில் இருந்து நீங்கள் தப்ப வேண்டுமாயின் கொள்ளைகளைத் தடுக்குமாறு கோரி ஜே வி. பிக்கு கடிதம் எழுதி அதை உங்கள் வீட்டுத் தலைவாயிலில் ஒட்டி விடுங்கள்" என்றார்கள். ஊர் மக்களும் அவ்வாறே செய்தார்கள். அன்றிலிருந்து ஜே. வி. பியிடம் உதவி கேட்கும் கடிதம் தென்படும் வீட்டுப் பக்கமே கள்வர்கள் தலை காட்டவில்லை. மேலும் சில இடங்களில் குற்றவாளிகள் நிர்வாணமாக வீதி மின் கம்பங்களில் கட்டப்பட்டனர். இதன் பின்னர் இந்த இடங்களில் எல்லாம் திருட்டுக்கள் குறைந்து விட்டன.

### வளவுக்காரரர்களின் மனக்குறைகள்

ஆனால் கண்டியில் செல்வம் மிகுந்த, அதிக நிலபுலமுள்ள உயர்குலத்தோராய் மதிக்கப்படும் "வளவுக்காரர்" மட்டும் ஜே. வி. பியின் நடவடிக்கைகளை மனதார விரும்பவில்லை. காரணம்: பல இடங்களில் 'வளவுக்காரரர்' சாதாரண மக்களுடன் குடிசைகளுக்குச் சென்று சமமாக பந்தியமர்ந்து உணவு உட்கொள்

7ஆம் பக்கம் பார்க்க

## பஸ் நிலையத்தில் பார்த்து சிரித்த அந்த நபர் யார்?

கொழும்பு கோட்டை மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் – எப்போதாவது வந்து நம்மைத் தரிசித்துச் செல்லும் பஸ்ஸிற்காக காத்திருந்த போது தான் அந்த நபரை சந்தித்தேன்.

மிடுக்காக உடுத்தியிருந்த அவருக்கு நாற்பது வயதிருக்கலாம். நம்மோடு நன்கு பழகியவர் போல் நம்மைப் பார்த்து அழகாய் சிரித்து கையசைத்தார். அவர் யார் என்பதை எம்மால் உடனடியாக கிரகிக்க முடியாவிட்டாலும் கூட நாமும் தலையசைத்தோம்,

அந்தநபரோ வழியில் வந்தவர் அனைவரையும் பார்த்து பழக்கமானவர் போல் சிரித்து தலையசைத்துக் கொண்டு சென்றபோது தான் சந்தேகம் நம்மைத் தட்டியது. அருகில் நின்ற நம் சக பயணியிடம் அந் நபரைப்பற்றி விசாரித்தோம். அதற்கு அவர் "எனக்கும் அவர் யார் என்பது தெரியவில்லை. அவரும் என்னைப் பார்த்து சிரித்தார். நானும் பதிலுக்குசிரித்தேன்" என்றவர் திடீரென ஏதோ ஞாபகம் வந்தவராக "சிலவேளைகளில் யாராவது துணை அமைச்சராக இருக்கலாம். மக்களின் குறைகளை நேரில் பார்ப்பதற்காக திடீர் விஜயம் செய்கிறார் போலும் ......" என்றார்.

அதுவரை எம் இருவருக்கும் அருகில் நின்று எம் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொரு பிரயாணி சிரித்துக்கொண்டே சொன்னார் ... "எனக்கு அந்த நபரைத் தெரியும். அவன் அங்கொடை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தான். அண்மையில் ஆஸ்பத்திரியில் இருந்து தப்பி ஓடிய பைத்தியங்களில் இவனும் ஒருவன்" என்றார். அதைக் கேட்டபோது நமக்கு தலையே சுற்றுவது போலிருந்தது ஏதோ பிரச்சனையின்றி தப்பித்துக் கொண்டோம் என ஆறுதல் பட்டோம்.

அண்மையில் அங்கொடை, முல்லேரியா வைத்தியசாலை ஊழியர்கள் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுமார் இருநூறு மனநோயாளர்கள் ஆஸ்பத்திரியில் இருந்து தப்பியோடியுள்ளார்கள். அதற்கு ஓரிரு தினங்களின் பின்னரும் சுமார் இருபது மன நோயாளர்கள் தப்பியோடியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலை ஊழியர்களின் அசிரத்தை காரணமாகவே இவர்கள் தப்பியோடினார்கள் என்று கூறப்படுகின்ற போதிலும் அரசுக்கெதிரான சக்திகள் நிலைமையை மேலும் சிக்கலாக்குவதற்கே இவர்களை தப்பியோட வைத்திருக்கலாம் என்ற கருத்தும் கொழும்பில் பரவலாக பேசப்படுகின்றது. எது எவ்வாறாயினும் கொழும்பில் சற்று மிதமாக யாரும் சிரித்தாலும் கூடசந்தேகத்தோடு பல கண்கள் பார்ப்பதை காணமுடிகின்றது.

தனது மனைவியும் அங்கொடையில் இருந்து தப்பி விட்ட செய்தி கேட்டு திருவாளர் பொதுஜனம் தலைமறைவாகி விட்டதனால் அவரின் கருத்தைப் பெற முடியவில்லை.

★ கைதடி வயோதிபர் மடத்திற்கு ஒரு விஸிட் 1

# தள்ளாத வயதில் தனித்து போராடும் வயோதிபர்

கைதடிக்கு நாம் சென்று கொண்டிருந்தபோது ஒரு வயோதிபர் மெல்ல மெல்ல அடியெடுத்து நடந்து வந்து கொண்டிருந்தார்... அவருடைய பரிதாப நிலைமை அறிந்து உதவிசெய்ய முயன்றோம்.

அப்பு...நீங்கள் இந்த வயோதிபர் மடத்திலயா இருக்கிறியள் ''வயோதிப மடத்தில இல்லைத்தம்பி பிச்சக்கார மடத்தில...'' அவர் கூறிய வார்த்தைகள் எம்மை ஒரு கணம் நிலைதடுமாற வைத்தது.

வயோதிபரை மடத்தில் விட்டுவிட்டு அலுவலகத்திற்கு வந்தோம். எம் சிந்தனைகள் வயோதிபர்களின் நிலை நோக்கிச் சிறகடித்தது.

பெரியவர்களுக்கு மதிப்புக் கொடுக்கும் காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்று பெரியவர்கள் சிறியவர்களுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டிய காலமாக மாறிவிட்டது.

இந்தக் கிழடு ஒரு மூலையில கிடக்கிறத விட்டிட்டு எங்களுக்குப் புத்திசொல்ல வந்திட்டுது...... இந்தக் கிழடால பெரிய தொந்தரவாய்ப் போச்சு.. இந்தக் கிழட இஞ்ச வைச்சிருந்து பார்க்க இயலாது... எத்தனை நாளைக்கு மலம்சலம் எண்டு எடுக்கிறது... மெதுவா வயோதிப மடத்தில கொண்டுபோய் விட்டிடுவம்... வயோதிபர்களுக்கு இப்படியான மரியாதைகளே தற்போதைய சமுதாயத்தில் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

ஒரு வயோதிபர் பென்சன் எடுப்பவராகவோ அல்லது சேமலாபப் பணம் உள்ளவராகவோ அல்லது சொத்து உள்ளவராகவோ இருந்தால் அவரைப் பராமரிக்க பிள்ளைகள் ஏட்டிக்குப்போட்டியாக முன் வருவார்கள்... இருக்கும் பணத்தைக் கறந்துவிட்டால்... வயோதிபர்களின் நிலை கவலைக்கிடமாகிவிடும்... பணம்தான் இவர்களின் வாழ்வையும் நிர்ணயிக்கிறது.




பிள்ளைகளால் நடுத்தெருவில் விடப்பட்ட பலர் பிச்சைக்காரர்களாக யாழ். வீதிகளில் அலைகிறார்கள்... இவர்கள் படிக்காதவர்கள் அல்ல. வீட்டை விட்டுத் துரத்தப்பட்டு நடுத்தெருவுக்கு வந்தவர்கள்.

இன்று சமுதாயத்தில் இளைஞர்களின் வார்த்தைகளுக்கே மதிப்பு அதிகம். அனுபவமிக்க வயோதிபரின் சொல்லை எவரும் கேட்பதும் இல்லை. மரியாதை கொடுப்பதுமில்லை.

இன்றைய நவீனகால இளைஞர்கள் வயோதிபர்களை 'நயின்ரி' என்று செல்லமாக அழைக்கிறார்கள். எமது சமுதாயப் பாரம்பரியங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன... காவோலை விழ குருத்தோலை சிரிக்கின்ற நிலை மாற வேண்டும். இன்றைய இளைஞர்கள் நாளைய வயோதிபர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. அதேவேளை வயோதிபர்களும் நாம் இன்னும் வாலிபர்கள் தான் என நினைத்து வாலிபப் பருவத்தில் செய்தவற்றை இப்போது செய்ய முயலவும் கூடாது... இந்த வயோதிபரா இப்படி நடந்தார்... என்ற நிலையை வயோதிப சமுதாயம் உருவாக்கக்கூடாது.

இன்று நம் தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தளவில் வெளிநாட்டுப் பணம் பலரது கண்களை மறைத்துவிட்டது. பணம் அவர்களின் அந்தஸ்தை உயர்த்திவிட்டது. அந்தஸ்து வந்ததால் வயோதிபர்கள் மூலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். அவர்கள் படும் இன்னல்கள் வெளியுலகிற்குத் தெரிவதில்லை. மூடி மறைக்கப்படுகின்றன.

நடுத்தெருவில் விடப்பட்ட நூற்றுக்கணக்கான வயோதிபர்களில் மிகச்சொற்ப தொகையினரே வயோதிபர் இல்லங்களில் இருக்கின்றனர். ஏனையோர் வீடுகளுக்குள் ஒதுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்கின்றனர்.

கைதடி வீதியில் சந்தித்த வயோதிபர் ''இது வயோதிப மடமில்ல... பிச்சைக்கார மடம் தம்பி...'' என்று கூறிய வார்த்தைகள் எம்மை வயோதிப மடத்திற்குள் செல்லத் தூண்டியது.

வயோதிபர்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்களா? தகுந்த முறையில் பராமரிக்கப்படுகின்றார்களா? அவர்களின் குறைகள் என்ன?... இவர்களுக்கு நாம் எவ்வழியில் உதவலாம்.. இவ் வினாக்கள் எம் மனதில் அலைமோத வயோதிபர் இல்லத்திற்குள் நுழைந்தோம்.

நாம் முதலில் எம்மை வயோதிபர் இல்லப் பொறுப்பதிகாரியிடம் அறிமுகம் செய்துகொண்டோம்...அவர் எம்மை எதிர்பார்த்திருந்தவர் போல் ''நேரடி றிப்போட்டிற்காத்தானே வந்திருக்கின்றீர்கள்... எம்மீது குற்றச்சாட்டுகள் ஏதும் வந்ததா... நிச்சயமாக வந்திருக்குமே... என்று நாம் வந்த விஷயத்தைச் சொல்வதற்கு முதல் மனதில் உள்ளதை வேகமாகச் சொல்லிவிட்டார்.

நாம் வந்த விஷயம் தெரிந்தும் தாதிமார், பரிசாரகர்கள் எம்மைச்சுற்றி நின்றுகொண்டார்கள்.

வயோதிபர் இல்லத்தைச் சுற்றிப் பார்த்தோம். வேலிகள் அடைக்கப்படாது காணப்பட்டது. வயோதிபர்கள் தங்கும் வார்ட்டுகளில் பெரும்பாலானவை மிகவும் சுத்தமாக இருந்தன. சமயலறை சற்றுத் துப்பரவு குறைந்ததாகவே காணப்பட்டது. நாம் வார்ட்டுகளைச் சுற்றிப் பார்க்கின்றபோது சில தாதிமாரும் பரிசாரகர்களும் எம்முடன் வந்தனர். இடைக்கிடை அவர்களின் முகத்தையும் பார்த்தோம். அவர்களின் முகத்தில் மகிழ்ச்சியில்லை.

எம்மை யார் என்று அடையாளம் கண்டுகொண்ட ஒரு வயோதிபர் என் அருகில் வந்து... இஞ்ச சாப்பாட்டில பெரிய மோசடி நடக்குது தம்பி. என்ன மோசடி சற்று விளக்கமாகச் சொல்லுங்கோ... மத்தியான சோற்றுக்குள்ள வாய்வைக்க முடியாத கல்லுக்கிடக்கிது நல்ல கறி சாப்பிட்டு கனநாளாச்சு, முந்தி நல்ல கறிசோறு சாப்பிட்ட நாங்கள் இப்பஒரு கறி இரண்டு கறியோட நிப்பாட்டிப் போட்டினம்... முந்தி எங்களுக்கு கிழமையில் ஒருக்கா அல்லது இரண்டு தரம் முட்டை தருவினம்... இப்ப என்னடா எண்டா பாதி முட்டைதான் தாறுங்கள்... என்று சொல்லிக்கொண்டிருந்த போது ஒரு தாதி எமக்கருகில் வந்தார். வயோதிபர் தாதி அம்மாவாறு நான் போட்டுவாறன் ஆறுதலா வாரும் இன்னும் நிறைய விஷயம் சொல்லுறன் என்று கூறி நழுவினார்.

இன்னொரு வயோதிபமாது தம்பி. காலம தாற சாப்பாடு காணாது. இடியப்பம் எண்டா நாலு அஞ்சு தருவினம்... பாண் எண்டா ஒரு றாத்தல் பாணை வெட்டி மூண்டாப் பிரிச்சு ஒரு துண்டத் தருவினம்... என்றார்.

'நாங்கள் கஷ்ரப்பட்டு பிள்ளையளை பெத்து வளர்த்தும்

உதரன்

கடைசிக் காலத்தில கஞ்சி ஊத்துங்கள் எண்டு ...ஆனா இப்பிடி நடுத்தெருவில் விடுங்கள் எண்டு கனவிலும் நினைக்கேல்ல... அரசாங்கம் தாற சாப்பாட்டைப் பற்றி என்னத்தச் சொல்லுறது... ஏதோ அவங்களாவது தாறுங்கள்... நல்லதோ கெட்டதோ சாப்பிட்டுஉயிர்வாழுறம்...'' என்று வேதனையுடன் வயதுமுதிர்ந்த பாட்டி கருத்து வெளியிட்டார்.

சில வயோதிபர்களிடம் உணவுபற்றி கருத்துக்கேட்டபோது எந்தவித பதிலையும் தரவில்லை... ஐயா இருக்கேக்க எப்பிடிச் சொல்லுறது...ஐயா இல்லாதநேரம் வாங்கோ எல்லாம் வடிவாச் சொல்லுறன் என்று கூறிக்கொண்டே. ஒரு வயோதிபர் இடத்தைவிட்டு நகர்ந்தார்.

இவ்வயோதிபர் இல்லத்தில் 60 பெண் வயோதிபர்களும் 114 ஆண் வயோதிபர்களும் இருக்கின்றார்கள். இவர்களில் 60 பேர்துணையின்றி நடக்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இங்குள்ள வயோதிபர்களில் 16 பேர் சித்த சுவாதீனமற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இங்கு சில சிங்கள வயோதிபர்களும் இருக்கின்றார்கள்.

இவர்களின் நலனைக்கவனிக்க நான்கு தாதிமார்கள் மட்டுமே கடமையாற்றுகின்றார்கள். இங்கு கடமையாற்ற 20 பரிசாரகர்கள் தேவை. ஆனால் 14 பரிசாரர்களே உள்ளனர். இவர்களுள் ஐந்து பெண்களும் மூன்று ஆண்களும் தற்காலிக பரிசாதகர்களாகும். இவர்களுக்கு வேலைக்கு வந்தால் மட்டுமே சம்பளம் வழங்கப்படும்.

சிற்றூழியர்கள் நாலுபேர் மட்டுமே உள்ளனர், ஆனால் எட்டுப்பேர் தேவை. நாலு பேருக்கான இடம் காலியாகவே உள்ளது. சமயற்காரர்கள் மூன்றுபேர் தேவை. ஒரு பெண் சமையற்காரர் மட்டுமே இருக்கிறார். மலசல சுத்திகரிப்புக்கு ஐந்துபேர் தேவை. ஆனால் நாலுபேர் மட்டுமே உள்ளனர். இந்த நிலையில் இந்த வயோதிபர் இல்லத்தில் மிகவும் சிறப்பான சேவையை நடத்துவது என்பது சற்றுக் கடினமான காரியமே.

வயோதிபர் இல்லத்திற்கு மூன்று காவலாளிகள் தேவை. ஆனால் ஒரு காவலாளிகூட இல்லை. சிற்றூழியர்களில் ஒருவரே காவலாளியாகக் கடமையாற்றுகின்றார்.

இந்த வயோதிபர் இல்லத்தில் ஊழியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இப்பற்றாக் குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமானால் வயோதிபர்களின் குறைகளை ஓரளவு நீக்க முடியும் என ஊழியர் ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

> " என்ர மகன்என்ர மருமகளினர சொல்லக்கேட்டு இஞ்ச கொணடு வந்து விட்டிட்டான் ... அவனுக்கு பெத்து வளர்த்த தகப்பனை விட மனிசி பெரிசாப் போச்சு . அவனை நான் எப்படி எல்லாம் கஷ்டப்பட்டு வளர்த்தன நான் அப்பிடி கஷ்டப் பட்டு வளர்த்ததுக்கு கிடைச்ச பரிசு இதுதான் "

வயோதிபர் இல்லத்தில் நிரந்தரமாகவே ஒரு பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் தற்போது இல்லை. அவரது இடத்திற்கு புதிதாக ஒருவரும் நியமிக்கப்படவில்லை. இப்போது கைதடி சென்றல் வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியரே வயோதிபர் இல்லத்திற்கு வந்து நோயாளருக்கு சிகிச்சை அளிக்கிறார். ஆனால் இரவு நேரத்தில் நோயினால் அல்லலுறும் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாத அவல நிலையே காணப்படுகின்றது.

இவ் இல்லத்தில் வாழுகின்ற பல வயோதிபர்கள் ஆஸ்மா நோயினால் பாதிக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றார்கள் இவர்களுக்கு அடிக்கடி வைத்திய உதவி தேவைஇவர்களுக்கு சிகிச்சையளிக்க நிரந்தர வைத்தியர் இவ் இல்லத்தில் இல்லாத ஒரு பரிதாப நிலை காணப்படுகின்றது.

நோயாளர்களை ஏற்றிக் கொண்டு செல்வதற்கு ஒரு ஸ்ரெச்சரும் ஒரு மூன்றுசக்கர வண்டிலும் மட்டுமே. 174 வயோதிபர்கள் இருக்கின்ற இவ் இல்லத்தில் காணப்படுகின்றது இந்நிலைக்குப் பரிகாரம் காண பொது தாபனங்கள்கூட முன்வராதது வேதனைக்குரியதே.

இவ் இல்லத்தில் இருக்கின்ற வயோதிபர்கள் சிலரை சந்தித்து அவர்கள் இந்த நிலையத்திற்கு வரக் காரணம் என்ன என அறிய விரும்பினோம்.

''அவங்களுக்கு நான் இடைஞ்சளா இருக்கிறேனாம். எண்டு திட்டினார்கள்......... எனக்கு மானப்பிரச்சனை வந்திட்டுது வெளிக்கிட்டு வயோதிப மடத்துக்கு வந்திட்டன்...''

''என்ர, மனைவியின்ர கொடுமை தாங்க முடியாது அவளிட்ட இருந்து விடுதலை பெறத்தான் இஞ்ச வந்திருக்கிறன்... இஞ்ச ஒரு தொந்தரவும் இல்லாமல் நிம்மதியா இருக்கிறன்.

''என்ர மகன் என்ர மருமகள் சொல்லக் கேட்டு இஞ்ச கொண்டு வந்து விட்டான்... அவனுக்கு பெற்று வளர்த்த தகப்பனவிட மனிசி பெரிசாப் போச்சு... அவனை நான் எப்பிடி எல்லாம் கஷ்டப்பட்டு வளர்த்தன்... நான் அப்பிடி கஷ்டப்பட்டு வளர்த்ததுக்கு கிடைச்ச பரிசு தான் இது''.

''என்ர பிள்ளையளும் கஷ்டப்பட்டிச்சுதுகள். அதுகளுக்கு ஏன் தொந்தரவாக இருப்பான்......அவர்களின்ர துன்ப சுமையை குறைக்கிறத்துக்காக நான் இஞ்ச வந்திட்டன்...''

''என்ர பிள்ளையள் வெளிநாட்டில இருக்கிறார்கள். எனக்குத் தேவை எண்டா காசு அனுப்புவார்கள்... ...... என்ர மனிசி என்னுடைய சொல்லக் கேக்கையில...தன்ர இஸ்ரப்படி நடந்தா......அப்ப நீ உன்ர வழியைப்பார் நான் என்ர வழியைப் பாக்கிறன் எண்டிட்டு வந்திட்டன்''.

''நாங்க ரெண்டு பேருமுங்க புருசன் பெஞ்சாதியுங்க.... எங்கள கவனிக்க யாரும் இல்ல...... நாங்க ரெண்டு பேருமா இங்க வந்துட்டங்க''.

''நான் சிங்கள ஆளு... ஆனா நல்லா தமிழ் கதைப்பங்க......என்னை கவனிக்கவில்லை, நான் வயோதிப மடத்துக்கு வந்துட்டங்க. அவங்க.. யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியிட்டாங்க... ..இங்க மகிழ்ச்சியாக இருக்கிறேங்க''.

''என்ர சொத்து பத்துக்களை எல்லாம் வித்துக் கொடுத்து பிள்ளைய வெளிநாடு அனுப்பினன்......வெளிநாடு போனவன் போனவன் தான் எனக்கு ஒரு கடிதம் கூடப்போடயில்ல.....வறுமை என்னை வாட்டிச்சுது. மடத்துக்கு வந்திட்டன்.. ..என்ர பிள்ளை என்னுடைய பிரேதத்தக் கூட பார்க்க இஞ்ச வருவானோ தெரியாது......என்ர கவலைய யாரிட்ட சொல்லியழ''.

பெரும்பாலான வயோதிபர்கள் குடும்பத்தினரால் ஒதுக்கப்பட்டதாலேயே மடத்திற்கு வந்திருக்கின்றார்கள். இன்னும் சிலர் கவனிக்க ஒருவரும் இல்லாததால் இங்கு வந்தவர்கள். சிலர் மனைவிமாரின் கொடுமை தாங்க முடியாமல் மடத்துக்கு வந்திருக்கிறார்கள். தமது கௌரவத்திற்கு இழுக்கு என நினைத்து பிள்ளைகள் சிலரை இங்கு கொண்டு வந்து விட்டும் இருக்கிறார்கள்

வயோதிப இல்லவாட்டுகளை சுற்றி எமக்கு காட்டிய ஊழியர்கள் மூன்றும் இலக்க வாட்டைக் காட்டவில்லை இவர்கள் தாம் வெற்றிச் சாதனை புரிந்து எம்மை ஏமாற்றி விட்டதாக நினைத்துப்பெருமைப்பட்டதை ஒரு வயோதிபரே எம்மிடம் தெரிவித்தார்.

இந்த வாட்டில் உள்ள சில வயோதியர்கள் இங்கு நிலவும் குறைபாடு தொடர்பாக அடிக்கடி ஊழியர்களுடன் சண்டை பிடிப்பவர்களாம். அதனால் அவர்களை எம்மை சந்திக்காமல் இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்கள் என்ற தகவலையும் அவ் வயோதிபரே எம்மிடம் தெரிவித்தார்.

என்றுமே உண்மைகள் ஊமை ஆவதில்லை. சற்று ஓய்வு எடுக்கும்......

(திங்கள் தொடரும்)



அப்பு ஏன் திடீரென்று வயோதிப மடத்தை விட்டு விலகிப் போறியள்?

என்ர மனுஷியும் இஞ்சை வந்து சேர்ந்துட்டா......!

இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்திற்கு

# யானைக்கூட்டங்கள்விளைவிக்கும் வருடாந்த இழப்பு 2710லட்சம்

(கொழும்பு)

காட்டு யானைகள் கரும்புத் தோட்டங்களுள் புகுந்து கரும்புப் பயிர்களைத் தின்று நாசம் விளைத்தமையால், வருடந்தோறும் இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு, இருபத்தேழு கோடியே பத்து இலட்சம் ரூபா ஆகும்.

ஜூலை பன்னிரண்டாம் திகதியன்று விவசாய, உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியை தொழிற்சங்கப் பிரமுகர்கள் சந்தித்து உரையாடிய போது, அங்கு சமுகமாக இருந்த கூட்டுத்தாபனத் தலைவர், திரு. லலித்ஹெட்டியாராச்சி இவ்விழப்பு விபரத்தை வெளியிட்டார்.

சம்பள அடிப்படையிலாவது யானை விரட்டுவோரை அமர்த்தியிருந்தால் இப்பாரிய நஷ்டத்தைத் தவிர்த்து இருக்கலாம் என்றார் அமைச்சர். மேற்கொண்டு கரும்புப் பயிர்ச்செய்கைக்கு, குறிப்பாக செவனகல கரும்புத்தோட்டத்திற்கு, பாதுகாப்புப்பற்றிக் குறிப்பிடுகையில், அவர் காட்டு யானைகளுக்கு மணிகட்டும் ஆலோசனையை முன் வைத்தார். வன விலங்குத் திணைக்கள அதிகாரிகளுடன் இதனையிட்டு கலந்தாலோசித்து மூன்று வாரங்களுள் அறிக்கை, சமர்ப்பிக்கும் படியும் அவர் பணித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் வழக்கில் டீ. ஐ. ஜி. சாட்சியம்

## நெவில் பெர்னாண்டோவின் வீட்டுச்சுவர்களில் துப்பாக்கி குண்டு அடையாளங்கள் இருந்தன

முன்னாள் பாணந்துறை எம். பி. நெவில் பெர்னாண்டோவின் பாணந்துறை வீட்டுக்குப் போனபோது அவரது வீட்டின் சுவரில் துப்பாக்கி குண்டுகள்பட்ட அடையாளங்கள் காணப்பட்டன. வீடு மிக மோசமாக இருந்தது. இவ்வாறு பிரதிப்பொலிஸ்மா அதிபர் பி. பி. ஏக்கநாயக்கா உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்கு பிரதம நீதியரசர் பரிந்த ரணசிங்கா தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

தொடர்ந்து சாட்சியமளித்த பிரதி பொலிஸ் மா அதிபர்; நெவில் பெர்னாண்டோவின் வீட்டின் கண்ணாடிகள் நொருக்கப்பட்டதுடன் நிலத்தில் ரத்தக்கறைகளும் காணப்பட்டன. அவரது காரும் அடித்து நொருக்கப்பட்டிருந்தது. தளபாடங்களும் சேதமாக்கப்பட்டிருந்தன.

பாணந்துறை பொலிஸ் பிரிவு எனக்கு கீழே இருந்தது. 1988 டிசம்பர் 18-ம் திகதி நான் வீட்டில் இருந்தபோது பாணந்துறை பொலிஸிலிருந்து எனக்கு ஒரு தகவல் வந்தது. அதில் நெவில் பெர்னாண்டோ வீட்டு சூட்டு சம்பவம் பற்றி இருந்தது. இச்சம்பவத்தில் சிலர் இறந்ததாகவும் நான் அறிந்தேன்.

பகல் ஒருமணியளவில் நான் அங்கு பொலிஸ் சுப்பிரின்டன் திரு நவரட்ணராஜாவுடன் சென்றேன். நெவில் பெர்னாண்டோவின் வீட்டிற்கு முன்பாக சுமார் முந்நூறு பேர் அதிர்ச்சியுடன் காணப்பட்டனர். டாக்டர் நெவில் பெர்னாண்டோவுக்கு சில புத்திமதி கூறி கவனமாக இருக்கச்சொன்னேன்.

அவரது பாதுகாப்புக்காக அவருக்கு ஆறு ஆயுதங்களை வழங்குமாறு பொலிஸ் சுப்பிரின்டனுக்கு ஆலோசனை கூறினேன் அவை வழங்கப்பட்டன என்றார். அடுத்து சாட்சியமளித்த கடவத்த பொலிஸ் பொறுப்பதிகாரி ரீ. தென்னக்கோன் சாட்சியமளிக்கையில், 1988 டிசம்பர் 1-ம்திகதி ருகம சந்தியில் திரு. ஒஸி அபயகுணசேகராவின் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. இரவு 8 மணியளவில் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது மேடைக்கு நேரே துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. சில குண்டு வெடிப்புகளும் இடம் பெற்றன. மேடையில் இருந்தவர்கள் கீழே குதித்தனர் நான் மேடைக்கு போனேன், ஆனால் ஒஸியின் மெய்க்காவலர் சுட்டுக்கொண்டிருந்தார் என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. லக்ஸ்மன் ஜெயக்கொடி தமது சாட்சியத்தில் சில இடங்களில் சுதந்திரக் கட்சி கூட்டங்கள் குழப்பப்பட்டதாகவும் விபரித்துக் கூறினார்.

கம்பஹா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரஞ்சித் சமரசிங்கா கம்பஹா ஆஸ்பத்திரியில் காயமடைந்து அனுமதிக்கப்பட்டவர்களின் விபரங்களை தெரிவித்தார். விசாரணை தொடர்ந்தும் நடைபெறுகிறது.

### சைவ மன்றம்

(பருத்தித்துறை)

புலோலி கிழக்கில் சைவ சமய நடவடிக்கைகளை ஊக்குவிக்குமுகமாக சைவ மன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இச்சைவ மன்ற அங்குரார்ப்பணக்கூட்டம் இலங்கை சைவ மன்றத்தலைவரும் யாழ். கல்வித்திணைக்கள விஞ்ஞானக் கல்வியதிகாரியுமான திரு. எஸ். செல்லத்துரை தலைமையில் பருத்தித்துறை சிவன் கோவில் பார்வதவர்த்தனிகலா மண்டபத்தில் நடைபெற்றது.

### கொழும்பில் நிலைமை வழமைக்கு

போக்குவரத்து ஊழியர்கள் வேலைக்கு திரும்பியதையடுத்து தற்போது போக்குவரத்து நிலைமைகள் வழமைக்கு திரும்பின.

தூர இடங்களுக்கான பஸ் சேவைகளும் ரயில் சேவைகளும் நடைபெற்றது. இதனால் தற்போது அலுவலகங்களும் வழமைக்கு திரும்பியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

### கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவப் பேராசிரியர் குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றை கடந்த வாரத்தில் மேற்கொண்டு உள்நாட்டு மருத்துவத்துறை சம்பந்தமான ஆய்வினை மேற்கொண்டனர்.

உள்நாட்டு மருத்துவத் துறை சம்பந்தமான ஆய்வு வேலைகள் கிளிநொச்சிமாவட்டத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் குழுவினர் தெரிவித்தனர்.

இறுதிப்பரீட்சைக்கு தோற்றாத

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு தொழில்வாய்ப்பு சான்றிதழ்

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் இறுதிப்பட்டப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் பட்டதாரி மாணவர்கள் தொழில்வாய்ப்பை பெறுவதற்கு ஏற்றதாக வேலைவாய்ப்பு சான்றிதழ் ஒன்று வழங்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

ஆனால் இறுதிப் பரீட்சை நடைபெறாமல் எப்போதும் பட்டம் வழங்கப்படமாட்டாது என்றும் மாணவர்கள் இறுதிவருட பரீட்சைக்கு முன் பூர்த்தி செய்துள்ள பாடங்கள் மற்றும் வரவு விபரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவே இந்த சான்றிதழ் வழங்கப்படும் என மேலும் தெரியவருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக உயர் கல்வி தொழில்நுட்ப விஞ்ஞான அலுவல் அமைச்சர் திரு. போல் பெரேரா தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பரிசீலனை செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவர், உபவேந்தர்களும் கலந்துகொண்டனர்.

இங்கு இந்த சான்றிதழ் வழங்கப்படுவது இதுவே முதன் முறையாகும். எனினும் இது பட்டத்திற்கான சான்றிதழாக இருக்காது என்று பல்கலைக்கழக பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இறுதிப் பரீட்சைக்கு தோற்றாமல் இருவருட காலமாக சுமார் 6000 மாணவர்கள் காத்துநிற்கின்றனர். பல்கலைக்கழகங்கள் பாதுகாப்பு கருதி காலவரையறை இன்றி மூடப்பட்டுள்ளதால் மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதனாலே மேற்படி திட்டம் பற்றி ஆலோசனை செய்யப்பட்டதாக தெரிகின்றது.

### புதிய நியமனம்

(கொழும்புத்துறை)

பனை அபிவிருத்திச்சபை மன்னார் மாவட்டத்தில் பனை அபிவிருத்திட்ட வேலைகளைத் துரிதப்படுத்தும் முகமாகத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமனம் செய்துள்ளது. மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மரியதாசன் இதயராஜன் குரூஸ் என்பவர் இப்பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

### இலக்கிய வட்டம்

(புங்குடுதீவு)

வளரும் இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களை இலக்கியத்துறையில் முன்னெடுத்துச் செல்லும் வகையில் புங்குடுதீவு பகுதியில் இலக்கிய வட்டமொன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது.

புங்குடுதீவு, மண்காடு, உயரப் புலம்பெருங்காடு போன்ற பகுதிகளிலுள்ள இளம்எழுத்தாளர்கள் இவ்இலக்கிய வட்டத்தில் பங்கு பெறுவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றது.

## நம்மைச் சுற்றி நடப்பவை

திருமணம், பூப்புநீராடல், பிறந்தநாள், புதுமனைபுகுதல் ஆகிய நிகழ்சிகளுக்கு அழைப்புக் கிடைத்தால் நம் போன்ற நடுத்தர வருமானமுடையோர் படும் இன்னல் கொஞ்ச நஞ்சமன்று. அழைப்பு விடுத்தவரை மகிழ்விக்க வேண்டுமானால் ஏதாவது பரிசு கொண்டு செல்ல வேண்டும்.

என்ன பரிசு? பொருளா? காசா? என்ன பெறுமதி? காசு எங்கு பெறுவது? நகையை அடைவு வைப்பதா? கடன் வாங்குவதா? யாரை அணுகுவது? கடனை எப்படி அடைப்பது? வேறு எந்தச் செலவைக் குறைப்பது? இப்படி எத்தனையோ பிரச்சனைகள் எம் மண்டையைக் குடையும் – தலைவலி ஏற்படுத்தும் – ஏன்? குடும்பப் பிணக்கும் ஏற்படலாம்.

என்னைப் பொறுத்தளவில் நான் பரிசு வாங்கவோ, கொடுக்கவோ விரும்புவதில்லை. முடிந்தளவில் இவ்வாறான சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக் கொள்வேன். அதனாற்தான் நான் என் திருமணத்திற்கும் ஒருவர்க்கும் அழைப்புக் கொடுக்கவில்லை ஆனாலும் என்னோடு கூடித் திரிந்த நண்பர்கள் சிலர் திருமணத்திற்கு வந்திருந்தார்கள். அவர்கள் தந்த பரிசுகளையும் வேண்டா வெறுப்போடு பெற்றுக் கொண்டேன்.

அன்றிரவு பரிசுகளைப் பிரித்தாராய்ந்த பொழுது ஒரு 'என்வலப்' காணப்பட்டது. பணம் ஏதும் இருக்குமென எதிர்பார்த்து அதையெடுத்துப் பிரித்தேன். ஒரு கடிதம் காணப்பட்டது. எடுத்துப் படித்தேன்.

நண்ப,

எவ்வளவோ முயன்றும் கைமாற்றுக் கிடைக்கவில்லை இன்றைக்கு என் வெறும் வாழ்த்தை மட்டும் பெற்றுக் கொள், மாத முடிவில் சம்பளம் கிடைத்ததும் நல்ல பரிசோடு வந்து வாழ்த்துகிறேன்.

ஜி எம்

### இரு இளைஞர் சுட்டுக்கொலை

மானிப்பாய், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் இரு இளைஞர்கள் புதன்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

புதன்கிழமைகாலை மானிப்பாயில் காணப்பட்ட சடலம் உடுவிலைச் சேர்ந்த நா. விக்கினேஸ்வரன் (20) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டது.

இவை தவிர என். நித்தியராசா என்னும் பெயருடைய ஒருவரது சடலம் புதன்கிழமை திருநெல்வேலி பிரிவு அமைதிப்படையினரால் யாழ். போதனா வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

உடனடி வேலைவாய்ப்பு

T. V. TRAVELS

★ கனடா ★ அமெரிக்கா
★ அவுஸ்திரேலியா

நாட்டிற்கு செல்வோருக்கு
விஸா, ரிக்கற் செய்து தரப்படும்
குறுகிய நேரத்தில் செய்து தரப்படும்

மற்றும்

★ ஜேர்மன் செல்வோருக்கு
உடன் ஒழுங்கு செய்து தரப்படும்

★ சவூதி அரேபியா
Cleaners 450 SR
ஒரு மாதத்தில் பயணம் செய்யலாம்

★ KUWAIT நாட்டிற்கு
House Maid பெண்கள் (கிளீனர்) 30 KD

மற்றும்

சவூதி, குவைத், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் பிரயாணம் செய்யலாம்

T. V. TRAVELS
Brown Road
KOKUVIL

07167

## சுவையான செய்திகள்

### ஜப்பான் மொழி பேசும் குருவி

மேற்கு ஜப்பானில் வாழும் இத்தாசி கசவாக்கா என்பவரின் வீட்டில் வசிக்கும் சிட்டுக்குருவி மனித மொழி வடிவங்களில் பேசுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈச்சான் என்று அழைக்கப்படும் இச் சிட்டுக்குருவி இரு வருடத்திற்கு முன்னர் பூங்கா ஒன்றில் நிலத்தில் வீழ்ந்து கிடந்த நிலையில் மீட்கப்பட்டது.

கடந்த மாதம் முதல் இச்சிட்டுக்குருவி மனித ஒலிகளை எழுப்புவது அவதானிக்கப்பட்டது. இக்குருவி தனது பெயரைக் கூட உச்சரிப்பதுடன் வேறு ஜப்பானிய மொழிகளையும் பேசுகிறது.

சிட்டுக்குருவிகள் பேசுவது வெகு அபூர்வமானது எனவும் இக்குருவியின் குரல் கிளிகளின் குரலைப் போன்று உள்ளதாக ஜப்பானிய பறவை ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### சாத்திரப் பித்தர்கள்

உலகைக் கலக்கிய 'ஹிட்லர்' சாத்திரத்தில் அலாதியான நம்பிக்கை கொண்டவர். ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் முன் தமது நம்பிக்கைக்குரிய சாத்திரியைக் கலந்தாலோசித்தே முடிவு எடுப்பாராம்.

வின்ஸ்டன் சர்ச்சில், ஓயி டிலோல், ஸ்டாலின் போன்ற தலைவர்களும் தமக்கென ஒரு ஆஸ்தான சாத்திரியை வைத்துக் கொண்டே எதிர்காலச் செயற்பாடுகள் பற்றி முடிவுகள் எடுப்பார்கள். பொதுவாக உலகின் தலை சிறந்த தலைவர்கள் அனைவரும் சாத்திரக்கலையில் மிகுந்த நம்பிக்கையுடையோராகவே இருக்கின்றார்கள்.

### பால்ய விவாகங்கள்

நடப்பது என்னவென்று கொஞ்சம் கூட புரிந்து கொள்ள முடியாத நிலையிலுள்ள சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், தாய்ப்பாலையே உணவாகக் கொண்டுள்ள கைக்குழந்தைகளுக்கும் கூட விவாகம் நடத்தப்படுகின்றது.

இந்தியாவில் ''பால்ய விவாகம்'' சட்டரீதியாக தடை செய்யப்பட்டாலும், சம்பிரதாயம் எனும் போர்வைக்குள் இவ்வகையான பொம்மைக் கல்யாணங்கள் இப்போதும் நடைபெறுகின்றன.

குழந்தைகள் தங்கள் பெற்றோர்களின் மடியில் அமர்ந்திருக்க, புரோகிதர்கள் திருமணச்சடங்குகளை வழக்கம் போல் நடத்துவார்கள். மாலைமாற்றுதல், முதல் முத்தம், என்பன பெற்றோரின் தோளிலேயே சம்பவிக்கும். வசதி படைத்தவர்கள் மிக ஆடம்பரமான ஊர் வலங்களையும் நடத்துவதுண்டு.

### செபஸ்தியார் திருநாள்

புலோப்பளை கிழக்கு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று சனிக்கிழமை காலை ஆறரை மணிக்கு திருநாள் பூசையும், திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் இடம் பெறும். அருட்திரு பிரான்சிஸ் அடிகளார் திருநாள் வழிபாடுகளை நடாத்திவைப்பார்.

### வருடாந்த மஹோற்சவம்

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தின்வருடாந்த அம்பாள் மஹோற்வம் 26-ம் தி .தி புதன்கிழமை ஆரம்பமாகிறது.

ஆகஸ்ட்மாதம் 1-ம் திகதி மோட்ச சிரார்த்த சங்காபிஷேகமும் 3-ம் திகதிதேர்த்திரு விழாவும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### பாலர் பாடசாலை

(பூநகரி)

பூநகரியைச் சேர்ந்த பிள்ளையார்புரம் கிராமத்தில் சர்வோதய இயக்கப்பாலர் பாடசாலை யொன்று பூநகரி சர்வோதய இணைப்பாளர் இரா. செல்வராசாவினால் திறந்து வைக்கப்பட்டது. சர்வோதய நடைமுறைகள் பற்றியும் உதவிகள்பற்றியும் உரையாற்றினார் பெருந்திரளானபெற்றோர் இவ்வைபவத்தில் பங்குபற்றிச் சிறப்பித்தனர். பாலர் பாடசாலை ஆசிரியை செல்வி க.மங்களேஸ்வரி நன்றியுரை வழங்கினார்.

### இடமாற்றம்

(முள்ளியான்)

மன்னார்மாவட்டத்தில் கடற்றொழில் பரிசோதகராகக் கடைமையாற்றிய திரு.பசுபதி தேவநாயகம் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஆழியவளைப் பகுதிக்கு கடற்றொழில் பரிசோதகராக மே,19-ம்திகதி தொடக்கம் கடற்றொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே ஆழியவளையில் கடற்றொழில் பரிசோதகராக கடமையாற்றிய திரு. எஸ். கிருபாகரன் அவர்கள் மாங்குளம் நன்னீர்மீன்பிடிப்பகுதிக்குமாற்றப்பட்டுள்ளார்.

### தையல் பயிற்சி நிலையம் திறப்புவிழா

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் மத்தி நாவலர் சனசமூக நிலைய ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தை சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அண்மையில் திறந்துவைத்தார். திரு. ஈ. எம். நைல்ஸ் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பலர் உரையாற்றினார்கள்.

### வரட்சியால் குழந்தைகளுக்கு நோய்

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் நிலவும் கடும் வரட்சியால் அப்பகுதியிலுள்ள சிறு குழந்தைகள் பல நோய்களினால் பீடிக்கப்பட்டு வருகின்றனர்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எப்படி கைவிரிக்க முடியும்?

ஆசிரியர்,
முரசொலி,
ஐயா;

சென்ற 13. 7. 89 அன்று வெளிவந்த ''யாழ். மாவட்டத்திலுள்ள சில அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையங்களில் கட்டுப்பாட்டு விலையையும் மீறி அதிக விலையில் எரிபொருள் விற்கப்படுவதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை'' என்றபெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளரின் பொறுப்பற்ற செய்தியைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். காரணம் பலவுள.

அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் நிலையங்கள் மட்டும்தான் யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமையாளரிடம் தத்தமது காசோலைகளைக் கொடுத்து வேண்டிய பொருளுக்குரிய பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு, கொழும்பு சென்று டீசல் ஒரு லீற்றர் ரூ. 8. 39 சதத்திற்கும், மண்ணெண்ணை லீற்றர் ரூ. 6. 42 சதத்திற்கும் பெற்றுக் கொள்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் டீசலுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலை ரூ. 9 03 சதமாகும் மண்ணெண்ணை ரூ.6.90 ஆகும். கொழும்பு விலைக்கும் யாழ்ப்பாணத்து விலைக்கும் ஒரு லீற்றருக்கு =/64 சதம் உதாரணமாக ஒரு லொறியில் 210 லீற்றர் கொள்ளக் கூடிய 40 றம்கள் (கொள்கலன்கள்) ஏற்றி இறக்கலாம். ஆகவே (40×210) 8400 லீற்றர் டீசலுக்கு ரூ. 5376/= ஆதாயமுண்டு. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையங்கள் யாவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சட்டதிட்டங்களுக்கு அமையவே கடமையாற்ற வேண்டும். ஆனால் யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் குறிப்பிட்டது போன்று கட்டுப்பாட்டு விலையையும் மீறி அதிக விலையில் எரிபொருட்களை விற்பதற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறி கையை இலகுவில் விரித்துவிட முடியாது. இது ஒரு பொறுப்பு வாய்ந்த முகாமையாளருக்கு அழகான செயல் அல்ல. பதிலாக கள்ளச்சந்தைக்கு ஊக்குவிப்பதற்கான செயலாகும். முகாமையாளரினது இக் கூற்று கண்டிக்கப்படவேண்டியது ஒன்றாகும்.

யாழ். முகாமையாளர் நினைத்தால் பிராந்திய மேற்பார்வையாளரிடம் எரிபொருள் விற்பனையாளரிடம் சென்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைக்கு விற்கவேண்டும். இல்லையேல் பெற்றோலியப் பொருட்களை வைத்து விற்பனை செய்வதற்குரிய லைசென்சை ரத்து செய்து விடுவோம் என்று கூறினால் மட்டும் போதும் எல்லா எரிபொருள் நிலையங்களும் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பதற்கு முன்வருவார்கள். ஆனால் யாழ். முகாமையாளரினது இக்கூற்று கள்ளச்சந்தைக்கு ஊக்குவிப்பவராகத் தெரிகின்றது.

461, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

உண்மையுள்ள,
சா. கணேசன்.

## இன்று நாள் எப்படி?

**மேடம்:** வாக்கு வசிகரம், பணப்புழக்கம், பிரிந்த காதலர் ஒன்று சேருவர், இளைய சகோதரவழி நன்மை.

**இடபம்:** புண்ணிய வழிபாடு, வாகனநஷ்டம், வணிகர்கள் கடல்தொழில் செய்வோர் இலாபம், இயந்திரதொழில் மூலம் இலாபம்.

**மிதுனம்:** புகழ்தேடி வரும், புண்ணியசிந்தை, வணிகர்கள் இலாபம், புதுத்தொழில்.

**கடகம்:** உயர்பதவி, கல்வியால் தொழில், பிரிந்தவர்கள் ஒன்று சேருதல், புகழ்தேடி வரும், வாகனமாற்றம்.

**சிங்கம்:** மங்களகாரிய நிவர்த்தி, வாகனசுகம், வணிகர்கள் கடல்தொழில் செய்வோர் இலாபம்.

**கன்னி:** வாகனஇலாபம், வணிகர்கள் கடல்தொழில் மூலம் நன்மை, மனையலங்காரம், புதுத்தொழில்.

**துலாம்:** புகழ்தேடி வரும், வாகனமாற்றம், வணிகர்கள் இலாபம், விவாகநிச்சயம், தேடியவர் வருகை.

**விருட்சிகம்:** பிதாவழிசொத்து, புண்ணியவழிபாடு, வாகன சுகம், வணிகர்கள் இலாபம்.

**தனுசு:** இருதொழில், இடமாற்றம், வாகன மாற்றம், இலச்சுமி கடாச்சம், புகழ் தேடிவரும்.

**மகரம்:** வாகனசுகம், பெரியோராசி, விவாகநன்மை, எண்ணியது நடக்கும், வெளியூர் போனவர் வருகை.

**கும்பம்:** புகழ்தேடி வரும், வாகன இலாபம், விவாக நன்மை, பெரியோராசி, மனையலங்காரம்.

**மீனம்:** மங்கள காரியத்தடை, வீண்பழி, பொருள் நஷ்டம், புகழ்தேடிவரும், வாகனமாற்றம், புதுமனைச்சிறப்பு, புண்ணியவழிபாடு.

★ யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

## விளையாட்டு செய்திகள்

### ரவிசாஸ்திரியின் சாதனை

(விளையாட்டுத்துறை நிருபர்)

கிரிக்கெட் வீரர்களின் சாதனைகளுள் இந்திய கிரிக்கெட் அணி வீரர் ரவி சாஸ்திரிக்கு ஒரு தனிப்பெருமை யுண்டு. அது என்னவென்றால் 113 நிமிடங்கள் துடுப்பெடுத்தாடி 200 ஓட்டங்களைக் குவித்தவர் என்ற பெருமையாகும்.

1984-85-ல் பம்பாயில் நடைபெற்ற பம்பே-பரோடா அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் பந்தயத்தில் இந்த அபூர்வ சாதனையை நிகழ்த்தியுள்ளார். உலக அளவில் கிரிக்கெட் சரித்திரத்தில் 113 நிமிடங்களில் இரண்டு சதங்களைப் போட்ட கிரிக்கெட் வீரர் எவரும் இல்லை என்பது இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

### இங். குழு இலங்கை விஜயம்

இலங்கை பூப்பந்தாட்டச் சம்மேளனத்தின் அழைப்பின் பேரில் இங்கிலாந்திலுள்ள பேசன் கல்லூரி மாணவ மாணவிகள் 16 பேர் கொண்ட குழுஒன்றுஇலங்கை விஜயத்தை மேற்கொண்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை டீ.எஸ். சேனநாயக்கா கல்லூரிக்கும், விருந்தினர் அணிக்கும் இடையில் ஓர் சினேக பூர்வ பூப்பந்தாட்டம் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக பிரித்தானியத் தூதுவர் கௌரவ டேவிற் கிளஸ்ரன் கலந்து கொண்டார்

இக்குழு கொழும்பு, கண்டி, அனுராதபுரம், காலி, அம்பலாங்கொடை ஆகிய இடங்களில் சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டு சினேகபூர்வமான ஆட்டங்களில் பங்குபற்ற உள்ளது.

### மைதானம் புனரமைப்பு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானம் பல காலமாய் இராணுவ முகாமாய் இருந்ததினாலும், அண்மைக்கால நிகழ்வுகள் காரணமாகவும், முற்றாக நிர்மூலம் ஆக்கப்பட்டிருந்தது. அதனை வடமராட்சி சர்வோதய இயக்கம் புனரமைத்துள்ளது.

இந்த விளையாட்டு மைதானப் புனரமைப்புப் பணியை எத்தனையோ தடங்கல்கள், இன்னல்கள் மத்தியிலும் சிறிதளவேனும் மனம் தளராது சர்வோதய வெளிக்கள உத்தியோகஸ்தர் திரு. பி. திலகநாதன் அவர்கள் தலைமையில் ஐம்பதிற்கும் அதிகமான, சமூக சேவைத் தொண்டர்கள், சிரமதான முறையில் பல நாட்கள் பாடுபட்டு செய்து முடித்துள்ளமை, மெச்சப்பட வேண்டிய தொன்றாகும்.

### யாழ். கோட்டக் கல்வி நடமாடும் அலுவலகம்

யாழ். கோட்டக்கல்வி அலுவலகம் நடமாடும் அலுவலக நடைமுறையை இங்கு ஆரம்பிக்கவுள்ளது.

இதன் முதல்கட்டமாக கோட்டக்கல்வி அதிகாரிகள் சாவகச்சேரி வட்டாரத்திற்கு விரைவில் விஜயம் செய்யவுள்ளனர். அங்கு பாடசாலை அதிபர்களை இவர்கள் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவர்.

இதன் அடுத்த கட்டமாக நல்லூர், யாழ்ப்பாண வட்டாரங்களைச் சேர்ந்த ஆசிரியர்களை சந்திப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

★ சபாநாயகரின் மைக்ரோபோன் பறிக்கப்பட்டது

# இந்திய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் குழப்பம்

இந்திய பாராளுமன்றத்தின் இரு சபைகளும் நேற்று முன்தினமும் பல தடவைகள் ஒத்திப் போடப்பட்டன. சபையில் பெரும் கூச்சலும், குழப்பமும் காணப்பட்டது.

'போபஸ்' ஆயுத பேர விவகாரம் குறித்து எதிர்க்கட்சியினர் நேற்று முன்தினமும், அதற்கு முன் தினமும் குழப்பம் விளைவித்தனர்.

இதனால் நேற்று முன் தினம் மட்டும் லோக்சபா அலுவல்கள் எட்டுத்தடவையும், ராஜசபா அலுவல்கள் ஐந்து தடவையும் ஒத்திப் போடப்பட்டன.

அலுவல்களை ஒழுங்காக நடத்த இருசபைத் தலைவர்களும் எடுத்த முயற்சிகள் யாவும் பயனற்றுப்போயின.

லோக்சபாவில் சபை ஒரு மணி நேரம் நீடிக்கப்பட்ட போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சபாநாயகரின் மைக்கிரோபோனை பறித்து அதன் வயர் தொடர்புகளை துண்டித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் சபையின் நடுமையத்திற்குச் சென்று சபாநாயகருடன் நேரடியாக விவாதத்தில் ஈடுபட்டனர்.

ராஜசபாவில் எதிர்க்கட்சியினர் பலதடவைகள் கூச்சலிட்டு குழப்பம் செய்ததால் பட்டியலில் குறிப்பிட்டபடி சபையை நடத்த முடியவில்லை

# செவ்வாய்க்கிரக நீண்ட பயணத்திற்கு விண்கலங்களை ஒன்றிணைத்து அனுப்பவேண்டும்

(வாஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி வீரர் நிலவில் காலடி எடுத்து வைத்த இருபது ஆண்டு நிறைவையொட்டி அமெரிக்க ஜனாதிபதி புஷ் புதிய விண்வெளி திட்டம் ஒன்றை நேற்று முன்தினம் மாலையில் வெளியிட்டுள்ளார்.

இருபத்தியோராம் நூற்றாண்டில் விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்கா செய்யப் போவது என்ன என்பதுபற்றி அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலவில் நிரந்தர தளம் ஒன்றை நிறுவுவது; அமெரிக்கா மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் சேர்ந்து செவ்வாய்க் கிரகத்துக்கு பயணம் செய்தல், ஆகியவே இப்புதிய விண்வெளி திட்டங்களாகும்

இவற்றுக்கான செலவு நான்கு லட்சம் மில்லியன் அமெ. டாலர்கள். எனவே இதை வெளியிட முன் வெள்ளை மாளிகை நன்கு பரிசீலித்தே வெளியிட்டுள்ளது.

செவ்வாய்க்கு செல்வதானால் அது நீண்ட பயணம் இதற்கு பல விண்கலங்களை இணைத்து தான் அனுப்பவேண்டும். என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் விண்வெளி திட்டங்களில் ஆர்வமுள்ளவர் எனினும் இத்திட்டங்கள் மூலம் நல்ல பலனை அடையவேண்டும் என்பது அவர் கொள்கை இதனாலேயே புதிய திட்டத்தை அறிவித்துள்ளார் என அமெரிக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## இந்தியப்...

சிலோன் சிப்பிங் லைன்ஸ் அன்ட் கார்கோபோட் என்ற கம்பனிக்கு சொந்தமானவையாகும். இலங்கை துறைமுகம் அனுமதி கொடுத்ததன் பின்னரே இக்கப்பல்கள் இலங்கைக்கு செல்லும் என தூத்துக்குடி துறைமுக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பைத்தியக்கார..

தனக்கு ரகஸியமாக இந்த தண்டனை வழங்கப்பட்டதாகவும் தானே விரும்பி மொட்டை அடித்து உடலில் கரிபூசியதாகவும் தெரிவித்தார்.

## அரசியல்...

கடந்த புதன் முதல் திரு பராபரன் தனது புதிய காரியாலயத்திலேயே அலுவலக கடமைகளை ஆரம்பித்துள்ளார் பொதுமக்கள் அலுவலக நேரத்தில் இவரை மேற்படி செயலகத்தில் சந்திக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த)ப் பரீட்சை
(புதிய / பழைய பாடத்திட்டம்) — 1988 டிசம்பர்

பெறுபேறு மீளாய்வு செய்வதற்கான

## விண்ணப்பப் படிவம்

01. 1) விண்ணப்பதாரியின் பெயர் (திரு/திருமதி/செல்வி) —
(முதலெழுத்துக்களுடன்)
2) சொந்த முகவரி—

02. சுட்டெண் [ ] பரீட்சை நிலைய எண் [ ] மீளாய்வு செய்வதற்கான பாடம் [ ]

பாட எண் [ ] கிடைத்த தரம் [ ] மொழி மூலம் [ ]

03. பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கு—
மேற்குறித்த விண்ணப்பதாரர் என்னுடைய பாடசாலை/கல்லூரி மாணவர்/மாணவி என்பதையும் இங்கு குறிப்பிட்டுள்ள பரீட்சையின் சுட்டெண்ணும் பரீசை நிலைய எண்ணும் கிடைத்த தரமும் பெறுபேற்று அட்டவணையின்படி சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................
அதிபரின் கையொப்பம்

.......................................
.......................................
பாடசாலை / கல்லூரியின் பெயரும், முகவரியும்.

04. ஒட்டப்பட்டுள்ள முத்திரையின் பெறுமதி (எழுத்தில்)

| முத்திரையை இக்கூட்டில் ஒட்டி அதன் மேல் விண்ணப்பதாரி கையொப்பமும், திகதியும் இடல்வேண்டும் |
|---|

05. விண்ணப்பதாரியின் உறுதியுரை—
என்னால் வழங்கப்பட்டுள்ள மேற்படி விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும், பொய்யான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் இவ்விண்ணப்பப் படிவத்தை நிராகரிப்பதற்கும் மீளாய்வின்போது ஏற்படும் புள்ளிகளினதும் தரத்தினதும் குறைவடைதலை அல்லது அதிகரிப்பை ஏற்றுக்கொள்வதற்கும், மீளாய்வு தொடர்பான சட்டதிட்டங்களிற்கிணங்கி கட்டுப்படுவதற்கும் இணங்குகின்றேன் என்று உறுதி செய்கின்றேன்.

திகதி— .......................................
.......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

## அரசு...

பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட எமக்கு கொழும்பில் வாழ்வதற்கோ, இச்சபையில் கலந்து கொள்வதற்கோ போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என கருதவேண்டியுள்ளது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட ஈ பி.ஆர் எல்.எப். உறுப்பினர் திரு. சாம். தம்பிமுத்து நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், கொழும்பில் வாழக்கூடிய தமிழ் அரசியல் தலைவர்களை தொடர்ந்தும் கொலை செய்து வருகின்றனர். இந்நிலையில் எமக்கான பூரண பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யும் வரையில் நாம் இச்சபையின் நடவடிக்கைகளில் எவ்வாறு தொடர்ந்து கலந்து கொள்வது? சபை அமர்வுகளில் தொடர்ந்தும் நாம் சமுகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதையிட்டு வருந்துகிறோம்.

பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளாகிய எம்மை, இந்நாட்டின் பிரஜைகளாக இந்நாட்டு அரசாங்கம் கருதுகின்றதா எனும் சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. பாராளுமன்றத்துக்கு நாம் தெரிவு செய்யப்பட்டு 6 மாதங்களுக்கு மேலாகியும் இவ் அரசாங்கம் எமது பாதுகாப்புக்கு தேவையான ஆயுதங்களை இன்னமும் தரவில்லை. ஆனால் இச்சபைக்கு இன்று வரை வராதிருக்கும் சத்தியப் பிரமாணம் இதுவரை செய்து கொள்ளாத 'ஈரோஸ்' இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு ரி-81 நவீன தானியங்கி இயந்திர துப்பாக்கிகள் 16 ஜூலை 89 சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளன. இச்சபைக்கு தெரிவு செய்யப்பட்ட 13 உறுப்பினர்க்கும் ஒவ்வொருவருக்கு 5 எனும் அடிப்படையில் வழங்கப்பட்டதாக அறிகின்றோம். எனவே இவ் அரசாங்கம் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து உறுப்பினர்களில் ஒரு பிரிவினரை இரண்டாம் பட்சமாக நடாத்துகின்றது என கருதுகின்றோம்

சிங்கள மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் எதிர்க்கடசி உறுப்பினர்களுக்கு 'சொட் கண்', றிப்பீற்றர், றைபிள். ரிவோல்வர் ஆகிய மாத்திரமே கொடுக்கப்பட்டுள்ளது என்பதனை இச்சபைக்கு சுட்டிக்காட்டுவது அவசியமென கருதுகின்றோம் ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தானியங்கி இயந்திர துப்பாக்கிகள் வழங்கியதன் மூலமாக பாராபட்சம் காட்டப்பட்டதனை இச்சபையின் கவனத்திற்கு சுட்டிக்காட்டுவது அவசியமெனக் கருதுகின்றோம்.

நாம் ஆயுதங்களை கேட்ட போது இவ்வாயுதங்களை கையாள்வதற்கான பயிற்சியை எமது மெய்ப்பாதுகாவலர் பெறவேண்டுமெனக் கூறினர். ஆனால் இன்றுவரை எமது மெய்ப்பாதுகாவலருக்கு பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால் இச்சபைக்கு இன்றுவரை வராத உறுப்பினர்கள்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய ஒரு பிரிவினருக்கு எதிரான சதி முயற்சி இதுவென நாம் கருதுகின்றோம்.

எமது பாதுகாப்பு சம்பந்தமாக இவ்வரசாங்கம் அக்கறையில்லாது இருப்பது மாத்திரமல்லாமல், எம்மை கொழும்பில் கொலை செய்வதற்கான நிலைமையினையும் ஏற்படுத்தியுள்ளது என்பதனை இச்சபையில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை இவ்வரசாங்கம் எடுக்கும்வரை இச்சபையின் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை இச்சபையின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளோம் என்பதை மனவேதனையுடன் தெரிவித்து கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் மாகாணசபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஐந்து மெய்பாதுகாப்பாளர்களை தரவேண்டிய வழக்கமிருந்தபோதிலும் மற்றைய ஏழு மாகாணங்களிலும் மாகாணசபை உறுப்பினர்கள் அனைவர்க்கும் ஒவ்வொருவருக்கு ஐந்து மெய்பாதுகாப்பாளர்களும் தரப்பட்டுள்ளனர். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஒரு ஆயுதம் தானும் வழங்கப்படவில்லை. கௌரவ சபாநாயகர் அவர்களை வடக்கு, கிழக்கு மாகாணம் ஸ்ரீலங்கா அரசு சாசனத்திற்கு கட்டுப்படாத பகுதியா என அரசாங்கத்தை கேட்க விரும்புகின்றேன் இவ்வாறு அவர் கூறினார்.

## உடுகம்பொலவின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

இது இவ்விதமிருக்க சமூக சீரழிவிற்கு வழிவகுக்கும் களியாட்டங்களையும் ஜே.வி பியினர் கண்டி மாவட்டத்தில் தடைசெய்து வருகின்றார்கள். அண்மையில் 'போசன்' கொண்டாட்டத்தின் போது முல்கம்பொல என்ற இடத்தில் கட்டப்பட்டிருந்த போசன் பந்தலில் ஆபாசப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டதற்காக அந்த பந்தலுக்கு பெருமளவில் நிதியுதவி செய்த கடைக்காரர் ஒருவரை ஒரு வார காலத்திற்கு கடையை மூடி, கடையில் பாவ மன்னிப்புக்காக வெள்ளை, கறுப்புக் கொடிகளை பறக்க விடுமாறு ஜே.வி.பியின் இராணுவ அணியான டி.ஜே.வி உத்தரவிட்டுள்ளது.

### மீண்டும் உடுகம்பொல:-

இதேவேளையில் ஜே வி பி எதிர்ப்பு நடவடிக்கைகளில் புகழ் பெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. பிரேமதாஸ உடுகம்பொல தற்பொழுது கண்டி மாவட்டத்திற்கு நியமிக்கப் பட்டுள்ளார். இவரது வரவுக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் முகமாக, இவரை கண்டி மாவட்டத்திற்கு வரவழைப்பதில் தீவிரமாக இருந்து செயல்பட்டதாகக் கூறப்படும் திரு. அனுரா டானியல் எம்.பி. மொறகொலவில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

பிலிமத்தலாவை என்ற இடத்தில் காணப்பட்ட டி. ஜே. வியின் சுவரொட்டியொன்று இவ்வாறு தெரிவிக்கின்றது. ........"சர்ச்சைக்குரிய பொலிஸ் அதிகாரியை கண்டிமாவட்டத்திற்கு வரவழைப்பதில் முன்னின்றதுரோகிகள் அனைவரும் அனுரா டானியலின் மாதிரியையே பின் பற்றுவார்கள்"

கண்டி நிலைவரம் பற்றி கருத்தறிய எமது திருவாளர் பொது ஜனத்தை தேடினேன். என்ன பரிதாபம் .....கையில் கறுப்பு வெள்ளைக்கொடியுடன் வாயில் பிளாஸ்ரருடன் (Plaster) நம்மைப் பரிதாபமாகப்பார்த்தபடி சென்றுகொண்டிருந்தார். என்ன குற்றத்திற்கான தண்டனையோ யாரறிவார். அடுத்ததடவை அவரைச் சந்தித்து விபரம் கேட்கும் வரை பொறுமையாய் இருப்போம்.

## ஒரு மணித்தியா...

பதினைந்து நிமிட இடைவேளையை முப்பது நிமிடமாக அதிகரிப்பது எனவும், பாடசாலை நேரத்தை இரண்டு முப்பது மணி வரை நீடிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

வறுமை நிவாரண பிரதி ஆணையாளரிடம் புகார்

# புதிய உணவு முத்திரைக்கு பலர் பொருள் பெறவில்லை

புதிய உணவு முத்திரையின் முதலாம், இரண்டாம், மூன்றும் புள்ளிகளுக்குரிய உணவுப் பொருட்களை சகலரும் பெற்றுக் கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இந்த புள்ளிகளுக்குரிய உணவுப் பொருள்களை இம்மாதம் இருபதாம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனல் சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இப்புதிய உணவுமுத்திரை வழங்கல்வேலைகள் இன்னும் பூர்த்தியாகப்படவில்லை. அத்துடன் கடந்தசில தினங்களில் சில பகுதிகளில் ப.நோ. கூ. சங்கங்கள் மூடப்பட்டிருந்தமையினுலும் பலர் தமக்குரிய உணவுப் பொருள்களை பெறமுடியாதிருந்தது.

இதனையடுத்து இந்த புள்ளிகளுக்குரிய உணவுப்பொருள்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கு மேலும் கால அவகாசம் வழங்குமாறு யாழ். மாவட்டசமூகசேவைத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திருமதி.கமலா சிவசிதம்பரம் வறுமை நிவாரண பிரதி ஆணையாளர் திருமதி.பி.கே.குணவர்த்தனவைக் கேட்டுள்ளார்.

## யாழ். பல்கலைக்கழகத்தில் வறிய மாணவருக்கு நிதியம்

யாழ். பல்கலைக்கழகத்தில் மகாபொல மற்றும் உதவிப் பணம் கிடையாத வறிய மாணவர்களுக்கு உபவேந்தர் நிதியத்திலிருந்து மாதாந்த உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் தற்பொழுது பெறப்பட்டு அவை பல்கலைக்கழக நிர்வாகத்திஞல் ஆராயப்பட்டு வருகின்றன.

மகாபொல அல்லது உதவிப் பணம் கிடையாத மாணவர்களுள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள மாணவர்களுக்கே உபவேந்தர் நிதியத்திலிருந்து உதவிப்பணம் வழங்கப்படவுள்ளது.

## தென்பகுதி நிலைவரங்களால் அரச ஊழியர் சம்பளம் தாமதம்

(எப்.சி.ஆர்.)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல அரசாங்க திணைக்கள மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு இம்மாத சம்பளம் தாமதமாகவே வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தென்பகுதி நிலைவரங்கள் காரணமாக இப்பகுதியைச் சேர்ந்த பல திணைக்களங்களினதும் கூட்டுத்தாபனங்களினதும் கொழும்பு தலைமை அலுவலகங்களில் கடந்த சில வாரங்களாக வழமையான கருமங்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

இதனுல் ஊழியர்களின் சம்பள கொடுப்பனவுகளுக்குரிய கட்டுநிதி காசோலைகளை தயாரித்து சம்பந்தப்பட்ட பிராந்திய நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதில் தாமதமேற்பட்டுள்ளது.

இதனுல் யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கும் சம்பளம் தாமதமாக வழங்கப்படவுள்ளது.

இதே போன்றே யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வூதியகாரர்களுக்குரிய ஜூலை மாத ஓய்வூதியத்தை வழங்குவதிலும் தாமதமேற்பட்டு வருகின்றது.

எனினும் குறிப்பிட்ட தொகை ஊழியர்களை மட்டும் கொண்டுள்ள சில திணைக்களங்கள் மாற்று ஏற்பாடுகளின் மூலம் இம்மாத சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்து வருகின்றன.

ஏனைய திணைக்களங்கள் கொழும்பிலிருந்து கட்டுநிதி காசோலையை இங்கு தருவிப்பதற்கான முயற்சியிலீடுபட்டு வருகின்றன.

### பாராளுமன்ற...

காலச் சட்டம் அமுலுக்கு வந்தது.

பாராளுமன்றத்தின் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு சபைக்கு பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. இதனுல் சபையின் பார்வையாளர் கலரிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. வெளி, உள் வாயில்களில் வழமையைவிட பந்தோபஸ்து நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

மறைந்த கூட்டணி பிரமுகர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. இதற்கான அனுதாபப் பிரேரணை விரைவில சமர்பிக்கப்படவுள்ளது.

### வடகிழக்கு...

ளது.

அத்துடன் ஐம்பது மகேந்திரா ஜீப் வண்டிகள், இருநூற்றி இருபத்திஐந்து மறுசீரமைக்கப்பட்ட கார்கள், ஐம்பது பஸ் வண்டிகள், இருபது லொறிகள், பத்து தண்ணீர் பவுஸர் வண்டிகள் என்பவற்றையும் பத்து மின்சார ஜெனரேட்டர்களையும், ஒரு கேஸ் ரேபைன் மின் உற்பத்தி சாதனங்களையும் வழங்குவதற்கு இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது.

இவற்றில் சில பொருள்கள் ஏற்கனவே இரண்டு கப்பல்கள் மூலம் திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

### இந்திய...

போடப்பட்டன.

போர்பஸ் பீரங்கிப்பேர ஊழல் விவகாரத்தை சபையில் எழுப்பி எதிர்க்கட்சிகள் கூச்சலும் குழப்பமும் செய்ததினுலேயே பாராளுமன்றநடவடிக்கைகள் ஒத்திபோடப்பட்டன.

### உமாமகேஸ்வரன்...

கண்டனம் தெரிவித்துக் கொள்வதுடன் இவ்வாறுன கொலைகள் மூலம் எந்த ஒரு விடுதலை ஸ்தாபனத்தையும் அழித்துவிட முடியாது. இதனை கொலையாளிகள் உணரவேண்டும். இது வரலாறு கண்ட உண்மையாகும்.

இவ்வாறு தமிழ் ஈழமக்கள் விடுதலைக் கழகம் அதன் செயலதிபர் திரு. உமாமகேஸ்வரனின் மறைவையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இவ்விழப்புக்களைக் கண்டு சலித்துவிடாது கழகத்தின் கொள்கைக்கு கட்டுப்பட்டு எமது மக்களின் விடுதலைக்கான போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதுடன் எமது மறைந்த தலைவர் உமாமகேஸ்வரனுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இன்று 22-ம் திகதி சனிக்கிழமை அனைத்து தமிழ்பேசும் மக்களும், அரச தனியார் பொதுஸ்தாபனங்களும் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்து 29-ம் திகதி சனிக்கிழமைவரை துக்கதினம் அனுஷ்டிக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

## பொடிச் செய்திகள்

### வல்வையில் தேடுதல்

(உடுப்பிட்டி)

நேற்று வல்வெட்டித்துறையின்ஒருபகுதியானநெற்கொழு என்னும் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டு பலர் கைது.

### யாழ்தேவிக்கு சூடு

நேற்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த யாழ்தேவி ரயிலை பரந்தனில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக பிரயாணிகள் தெரிவித்தனர்.

### விமானவிபத்து

(மணிலா)

பிலிப்பைன்ஸில் நேற்று போயிங்ஜெற் விமானம் ஒன்று விமான நிலைய ஓடுபாதையில் இருந்து விலகிஓடிஅருகேயுள்ள நெடுஞ்சாலையில் ஓடியதினுல் வீதியில்சென்றுகொண்டிருந்த ஐவர் பலியாகினுர்கள் பலர் காயமடைந்தனர்.

### இரு அமைச்சர்கள் பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள கல்வி தகவல் துறையமைச்சர் லொக்கு பண்டார இந்திய தகவல் துறையமைச்சர் ஏ. எச். பகத்துடன் நேற்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்.

தொலைககாட்சி ஒளிபரப்புகள் பற்றி இரு அமைச்சர்களும் பேச்சு நடாத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

### மாணவர்கள் பகிஷ்கரிப்பு

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான, கலைப்பீட மாணவர்கள் நேற்று தமது விரிவுரைகளை பகிஷ்கரித்தனர். நுண்கலைத் துறை முதலாம்வருட மாணவி செல்வி ராஜாம்பிகை நடராஜாவை விடுதலை செய்யக் கோரியே இப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே கோரிக்கையை வலியுறுத்தி நுண்கலைத்துறை மாணவர்கள் கடந்தவியாழக்கிழமை முதல் விரிவுரைகளை பகிஷ்கரித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### அரியாலையில் சுற்றிவளைப்பு

அரியாலை, மாம்பழம்சந்தி, கொழும்புத்துறை உள்ளிட்ட பகுதிகள் நேற்றுக்காலை சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தேடுதல் காரணமாக கண்டிவீதி வாகனப் போக்குவரத்துக்கள் செம்மணி-நல்லூர் வீதி வழியாக திசைதிருப்பப்பட்டு நடைபெற்றது.

## முறைசாராக்கல்வி மாணவருக்கு தொழில்வாய்ப்பு

முறைசாராக் கல்வி முறையின் கீழ் பயிற்சி பெற்று வெளிவரும் வறிய மாணவர்கள் மக்கள் வங்கியின் சுய தொழில் வாய்ப்பு கடன் திட்டத்தில் சேர்ந்து பயனைப் பெற முறைசாராக் கல்விக்கு பொறுப்பானவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

முறைசாராக் கல்வி போதனுசிரியர்கள் சிபார்சு செய்யும் வறிய மாணவர்கள் மேற்படி திட்டத்தில் ஆகக் கூடுதலாக முப்பதாயிரம் ரூபா வரையிலான கடனை மக்கள்வங்கி மூலம் பெறமுடியும் என மேலும் தெரியவருகின்றது.

### ஜி. சி. ஈ. ...

தற்பொழுது கோரப்பட்டுள்ளன.

பாடசாலை பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபர்கள் மூலமும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாகவும் தமது மீளாய்வு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடமொன்று மீளாய்வு செய்வதற்கான கட்டணம் இருபத்து ஐந்து ரூபாவாகும். ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படுதல் வேண்டும்.

இந்த மீளாய்வு விண்ணப்பங்கள் ஆகஸ்ட் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர், மதிப்பீட்டுக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு-2 என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் இடதுபக்க மேல்மூலையில் பரீட்சையின் பெயர், பாட எண், பரீட்சை நிலைய எண் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் மாதிரிபடிவத்திற்கமைய 30X20 செ.மீ. அளவில் தயாரிக்கப்படல் வேண்டும். மீளாய்வு கட்டணம் முத்திரையாக அதற்குரிய கூட்டில் ஒட்டப்பட்டு அதன்மேல் ஒப்பமிடப்படல் வேண்டும். சுட்டெண், பரீட்சை நிலைய எண், முன்னர் பெற்ற தரம் போன்ற விபரங்கள் விண்ணப்படிவத்தில் தெளிவாக எழுதப்படல் வேண்டும். புதியபாடத்திட்டமா அல்லது பழைய பாடத்திட்டமா என்பது குறித்து குறிப்பிட வேண்டும்.

## உமாமகேஸ்வரன் பூதவுடலுக்கு வவுனியாவில் மக்கள் அஞ்சலி

(வவுனியா)

மறைந்த 'புளொட்' செயலதிபர் திரு.உமாமகேஸ்வரனின் பூதவுடல் நேற்று முன்தினம் விமான மூலம் வவுனியா கொண்டுவரப்பட்டது.

பூதவுடல் பேழையை வன்னிப்பிராந்திய 'புளொட்' தளபதி திரு, எம். மாணிக்கதாசன் பொறுப்பேற்ருர். வாகன பவனியாக கோவில்குளம் சந்தைக்கட்டத்துக்கு அது கொண்டுவரப்பட்டது,

தமிழ் அமைப்புக்களான ஈ.பி. ஆர். எல். எப், ரெலோ ஈ. என். டி. எல். எப். ஆகியவற்றின் சிரேஷ்ட முக்கியஸ்தர்களும் தமது கட்சி சார்பில் அஞ்சலி செலுத்தினுர்கள்.

வவுனியா பஸ் நிலையத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் சில மணி நேரம் வைக்கப்பட்டபோதுவவுனியா பிக்கு வண. சியம்பலகஸ்வவ விமலசாரதேரோ, இலங்கை இராணுவ கேணல் கே. டி. இரத்திநாயக்காவும் அஞ்சலி செலுத்தினர்.

## மறைந்த கூட். தலைவர்களுக்கு வவுனியாவில் அஞ்சலிக் கூட்டம்

(வவுனியா)

மறைந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அ. அமிர்தலிங்கம், வெ. யோகேஸ்வரன் ஆகியோரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக தமிழர் அமைப்புக்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து வவுனியாவில் நடாத்தும் மாபெரும் இரங்கல் கூட்டம் இன்று 22-ம் திகதி சனிக்கிழமை வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் எஸ். கந்தையா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், வன்னிமாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ப. பராபரன், வன்னி மாவட்ட எம். பி. திரு. கே. ராஜகுகநேசன், மாகாணசபை உறுப்பினர் திரு. ஐ. யசோதரன், திரு. கே. பிரேமச்சந்திரன் எம். பி. சமாதான நீதவான் திரு. கு. நடேசபிள்ளை, திரு. எஸ். என். ஜி. நாதன் கூட்டணி பொதுச் சபை. உறுப்பினர், ரெலோ அரசியல் இணைப்பாளர் எஸ். கிறிஸ்ரி, உட்பட பலர் இதில் உரையாற்றுவார்கள்.

## 25 ஆயிரம் ஆசிரிய பயிலுநர் கொழும்பில் ஆலோசனை கூட்டம்

இருபத்தி ஐயாயிரம் ஆசிரிய பயிலுநர்களை சேர்த்துக் கொள்வது பற்றிய முக்கிய ஆலோசனைக் கூட்டமொன்று இன்று கொழும்பில் கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சி ஆசிரியர்களை எவ்வாறு தெரிவு செய்வது என்பது குறித்து இக்கூட்டத்தில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

இதேவேளை ஆசிரிய பயிலுநர்களை சேர்த்துக் கொள்வதற்கு போட்டிப் பரீட்சை எதுவும் நடாத்தப்பட மாட்டாது என கல்விச்சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 22-07-89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.